
தத்துவ உலகில் தடம் பதித்த

# பண்டிதர் மு. கந்தையா



கலாநிதி க. கணேசலிங்கம்

உலக சைவப் பேரவை
தலைமையகம், இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ உலகில் தடம் பதித்த
# பண்டிதர் மு. கந்தையா

சித்தாந்தரத்தினம்
கலாநிதி க. கணேசலிங்கம்

உலக சைவப் பேரவை
தலைமையகம், இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Thaththuva Ulakil Thadam Pathiththa*
*PanditHar Mu. Kanthiah*

First Edition : Sept. 2002

Author : Siddhantaratnam
Dr. K. Ganesalingam B.Sc. (Eng),
C.Eng, M.I.E.E. (Lond.), M.I.E.(Cey.)
Atheenap Pulavar,
London Meikandaar Atheenam

21 (9/2) Beach Home Avenue,
Besant Nagar, Chennai - 600 090. India
(Kuppilan, Jaffna)

Publishers : London Meikandaar Atheenam
(A U.K. registered charity)
for and on behalf of
World Saiva Council

72, King Edward Road,
London E17 6HZ, U.K.

Printers : Maazaru DTP, 45, Parthasarathi Naidu st,
Triplicane, Chennai-5, India.

*10.07.2002 ல் சிவபதம் அடைந்த சைவசித்தாந்த பேரறிஞர், பண்டிதர், கலாநிதி மு. கந்தையா அவர்களுக்கு நினைவாஞ்சலி செலுத்தும் வகையில் இந்நூல் வெளியிடப்படுகிறது.*

£ 0.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தவத்திரு சிவநந்தி அடிகளார்

ஆதீன கர்த்தர், தோற்றுனர், தலைவர்

**இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்**

**உலக சைவப் பேரவை**

72, King Edward Road, London E17 6HZ, U.K.

## வாழ்த்துரை

***சென்றுநாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம்,***
***சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்.*** -அப்பர்.

உலகத்துச் சமயங்களுள் வழிபடு தெய்வ இலட்சணங்களைச் சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கு விரோதமில்லாமல் முழுமையாக விளக்கும் சமயம் சைவம் ஒன்றே. தூய ஒருகுல நெறியாகிய சிவநெறியில் இடையில் வந்து கலந்த மாயாவாதக் கலப்பினால் ஏற்பட்ட மயக்கங்கள் இன்று மலிந்துள்ளன. திட்டமிட்ட ஊடுருவல்களால் இன்று சைவம் சிதைக்கப்படுகின்றது. சுமார்த்த மாயாவாதமே சைவத்தை உருக்குலைக்கும் அகப்பகையாகி விட்ட சூழ்நிலை தற்போது உலகெல்லாம் சிவாலயங்களில் தலைதூக்கியுள்ளது. இதை எதிர்கொண்டு, சைவர்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது எமது ஆன்மீகக் கடமையாகிறது.

இந்தச்சீரிய சிவபணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் அமரர் கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்கள். இவர் மும்மொழிப்புலவர்; சைவசித்தாந்த வித்தகர்; திருமுறைகளில் முழுகித்திளைத்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் பின்பற்றி பல அரிய சைவ நூல்களையும், கட்டுரைகளையும் கண்டனங்களையும் துணிந்து வெளியிட்டவர்.

இத்தகைய சைவப் பெரியார் நினைவாஞ்சலியாக வெளிவருவம் **'தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா'**, என்ற நூலை எழுதியுதவிய ஆதீனப் புலவர், சைவசித்தாந்தக் கலாநிதி, சித்தாந்தரத்தினம் திரு.க.கணேசலிங்கம் அவர்கள் பணியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். சைவ உலகம் இந்நூலைப் பெற்றுப் பயனடையுமாக.

***மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்***

**அன்பே சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

மாதொரு பாகன் மலரடி வாழ்க
தீதறு வாழ்வு தெளிந்தசித் தாந்தத்
தத்துவ ஞானம் தமிழினிற் புலமை
இத்தரை மீதினில் புகழினைப் பொருளை
நாடிடாக் குணநலம் சைவம் சிதைவதை
கூடிய மட்டும் தடுத்திடும் துணிவு
இவையவன் ஆளுமைக் கூறுகள் அறிஞர்
அவைபுகழ் பெருமகன் ஏழாலை ஊரின்
**பண்டிதர் கலாநிதி கந்தையா** அன்பும்
பண்பும் நிறைந்தவன் சிந்தையில் என்றும்
சிவமே கொண்டவன் சைவசித் தாந்தத்
தென்னையும் ஊக்கி அறிவுரை தந்தவன்
தன்னலம் கருதாத் தகைமையால் உளங்கள்
கவர்ந்தநற் சீலன் கடைசிநாள் வரைக்கும்
சிவப்பணி செய்தஇச் செம்மலின்
அடியிணைக் கெனது காணிக்கை இந்நூல்.

-க. கணேசலிங்கம்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | வாழ்த்துரை | 3 |
| | காணிக்கை | 4 |
| 1. | பண்டிதர் - ஒரு அறிமுகம் | 5 |
| 2. | பண்டிதர் வந்த பாரம்பரியம் | 8 |
| 3. | ஞானப்பிரகாசரும் சிவசமவாதமும் | 15 |
| 4. | பேரின்பத்துக்கு ஆணவம்? | 22 |
| 5. | தத்துவ விசாரணை | 27 |
| 6. | ஹவாய் ஆதீனத்தின் கருத்து வேறுபாடு | 34 |
| 7. | மலேசியாப் பணி | 38 |
| 8. | சைவத்தின் மறுமலர்ச்சி | 42 |
| 9. | அடிக்குறிப்பு | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பண்டிதர் - ஒரு அறிமுகம்

ஈழத்துச் சைவத் தமிழ் அறிஞர் வரிசையிலே பண்டிதர் மு. கந்தையா அவர்களுக்கு ஒரு தனியிடம் உண்டு. யாழ்ப்பாணத்து ஏழாலைக் கிராமத்தில் 19-06-1917ல் பிறந்த பண்டிதர் ஈழம், தமிழகம், மலேசியா போன்ற நாடுகளில் அறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கலாநிதிப் பட்டம் அளித்து அவரைக் கௌரவித்தது. உலகத்தமிழறிஞர்கள் தலை சிறந்த சைவத்தமிழ் அறிஞரெனப் போற்றினர்.

தமது சமயமான சைவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு இறுதிக்காலம்வரை சைவநெறி வழுவாமல் வாழ்ந்தவர் பண்டிதர். சைவ சமயத்திலும் அதன் தத்துவத்திலும் தெளிந்த அறிவு, கொள்கைக்காக எதனையும் விட்டுக் கொடுக்காத இயல்பு, தவறு காணின் கண்டிக்கும் துணிவு, உடல் தளர்வுற்ற போதும் மனம் தளராத உறுதி, அமைதியான வாழ்வு ஆகியவை அவரின் ஆளுமைக் கூறுகள்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளும் அறிந்தவர் அவர். அவரது சைவ, சித்தாந்த நூல்களில் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் உள்ள நூல்களிலிருந்து மேற்கோள்களும் ஆதாரங்களும் காட்டப்பட்டிருக்கும். வேத உபநிடதங்கள், ஆகமங்களிலிருந்து எடுத்தாளப்படும் கருத்துக்களுடன் அவற்றைத் தாங்கிய வடமொழி நூல்களின் பெயர்களையும் அவர் குறிப்பிடுவது வழக்கம். அந்நூல்களை அவர் படித்தறிந்து எழுதுவதை இதனால் உணரலாம். இது இன்றைய அறிஞர்களிடம் பொதுவாகக் காண முடியாதது. அவர்கள் வேதங்களில் இருக்கிறது, ஆகமங்களில் இருக்கிறது என்று கூறுவார்களேயொழிய அவை குறித்த நூல்களைக் குறிப்பிடுவது அரிது.

ஈழத்துச் சைவத் தமிழ் அறிஞர்களுக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. ஆறுமுக நாவலருக்கு முன் வாழ்ந்த ஞானப்பிரகாசர் முதல் பண்டிதர் காலத்தில் வாழ்ந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை வரை இந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியைக் காணலாம். சைவத் தமிழ் ஈடுபாடு, தமிழ்ப் புலமை, வடமொழிப் பயிற்சி, இறை நம்பிக்கை ஆகியவை அவர்களின் பாரம்பரியப் பண்புகள். இவற்றோடு, தமக்குச் சரியென்று தோன்றியவற்றை நடுநிலை நின்று, தமிழ் மரபுவழி வந்த ஆய்வு முறையில் எடுத்துரைப்பதும் இவர்களின் போற்றத்தக்க குணங்கள். இப்பாரம்பரியத்தின் பிரதிநிதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிவரை இருந்து அரும்பெரும் பணிகள் ஆற்றியவர் பண்டிதர் கந்தையா அவர்கள்.

சைவசித்தாந்தப் பரப்பில் இவர் விட்ட சுவடுகள் பல. உரையாசிரியர்களும் பிற அறிஞர்களும் விளக்க முடியாத சித்தாந்த முடிவுகள் பலவற்றை விளக்கிய பெருமை இவருக்குண்டு. இவரின் விளக்கங்களில் அறிவியல் நோக்கும் சிந்தனைத் தெளிவும் இருக்கும். ஆங்கில அறிஞர் வழியும் தமிழ் அறிஞர் வழியும் இணைந்த அணுகுமுறையை அவரின் தத்துவத் திறனாய்வில் காணலாம்.

பண்டிதருக்கும் இந்நூலாசிரியருக்கும் உள்ள உறவு கடிதத் தொடர்பால் வந்தது. அவரை நேரில் பார்த்துப் பேசிய வேளைகள் குறைவு. கலந்துரையாடியது ஒருமுறை. இது சென்னையிலுள்ள தருமபுர ஆதீனக் கிளையில் சில ஆண்டுகளின் முன் நிகழ்ந்தது. பண்டிதரின் எழுத்துக்கள் படிப்பவருக்குச் சிறிது கடினமாக, வடமொழிச் சொற்கள் ஆங்காங்கு கலந்து இருக்கும். இந்த நடையைச் சிறிது எளிமைப்படுத்தல் நல்லது என்ற நோக்கில், இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டபொழுது, "இது தான் இதற்கு நடை" என்றார்.

பொதுவாகப் பார்க்கும்பொழுது, பண்டிதர் தனது எழுத்தை இலகு தமிழில் எளிமைப்படுத்தி எழுதினால் பலருக்குப் பயன்தரும் போலத் தோன்றும். சைவ சித்தாந்தத்தின் ஆழமான கருத்துக்களை தமிழ், வடமொழி நூல்களிலிருந்து பெயர்த்தெடுத்துத் தரும்போது தனது நடை அதற்கு ஏற்றதென்று பண்டிதர் கருதினார். அவற்றில் புலமையுள்ளவர் இதனை மறுக்க முடியாது என்று இன்று எண்ணத் தோன்றுகிறது. பண்டிதரின் எழுத்து நடை அவருக்கே உரிய தனிநடை. அவரின் சித்தாந்த விளக்கத்திற்கு இது எவ்வளவுக்குத் துணை புரிந்தது என்பதை அவரின் நூலொன்றை அண்மையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது உணர முடிந்தது.

சைவசமயமும் அதன் தத்துவமான சைவசித்தாந்தமும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை; உலக அறிஞரின் பெருமதிப்பைப் பெற்றவை. சைவம் இன்று தன்னிலையிலிருந்து வீழ்ச்சியடைகிறது என்பது சைவ அறிஞர்களின் கருத்து. சைவத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களே சைவத்தின் வீழ்ச்சிக்குத் துணைபோவதை இன்று காண முடிகிறது. இது பண்டிதரின் மனத்தைப் பெரிதும் உறுத்தியது; வேதனை அளித்தது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைப் போக்க தனது முதிர்ந்த வயதில், அவர் எழுதிய கட்டுரைகளும் கடிதங்களும் பல.

*சைவசித்தாந்த மன்றம்* ஒன்று நிறுவி, இனிவரும் சமுதாயத்துக்கு சித்தாந்த அறிவூட்டி, சைவசமய ஈடுபாடு உண்டாக்க வேண்டுமென்பது அவரின் இறுதிக் காலக் கனவாக இருந்தது. இதனை அவர் எழுதிய கடிதங்கள் மூலம் காண முடிகிறது.

சைவத்தைப் போல் தமிழ் மொழியும் அதன் தனித்தன்மையுடனும் பாரம்பரியப் பெருமையுடனும் நிலைத்து நிற்க வேண்டுமென்று எண்ணியவர் பண்டிதர். அவரின் சமய நூல்கள், கட்டுரைகளில் தமிழ் இலக்கியம் மணக்கும்.

திருக்குறளுக்கு மேலான இடம் கொடுத்தவர் அவர். திருக்குறட்பாக்கள் பல உதாரணமாகவும் மேற்கோளாகவும் அவரின் எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ளன. பரிமேலழகர் உரை திருக்குறளுக்கு வந்த உரைகளில் சிறந்ததென்பது அவரின் கருத்து

*"திருக்குறள் ஒரு உயர்தர இலக்கணம். மருந்து பலன் செய்வதற்கு அனுபானம் போல, திருக்குறள் விளக்கத்திற்கு இன்றியமையாததெனப் பிரசித்தி பெற்றது பரிமேலழகர் உரை"* என்று அவர் கூறுவதே இதற்குச் சான்று பகரும்.[1]

திருக்குறளில் ஆழ்ந்த புலமையும் தெளிவும் இன்றிப் பலர் புதிய உரைகள் எழுதுகின்றனர். இவற்றில் பல, குறளின் உள்ளார்ந்த கருத்தைத் தராமல், அதனைத் திரித்துக் கூறுவதாக உள்ளன. இத்தகைய உரைகள் பள்ளிக்கூட நூல்களிலும் இடம் பெறுகின்றன. இதனைப் பண்டிதர் வன்மையாகக் கண்டித்தார்.

சைவசித்தாந்தம் தமிழரின் தத்துவம். இத்தத்துவக் கருத்துக்கள் திருக்குறளில் பொதிந்துள்ளன. திருக்குறள் கருத்துக்கள் அனைத்தும் பிற சமயங்களுக்கு ஏற்புடையன அல்ல. ஆனால் சைவத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்கள் அதில் இல்லை. இதனால் பண்டிதரின் எழுத்துக்களில் அவை இயல்பாகவே இடம் பெற்றன.

இறுதி மூச்சுவரை சைவம், சித்தாந்தம் என்று தனி மனிதராக நின்று உழைத்த பெருமகன் பண்டிதர் கந்தையா அவர்கள். அவரின் வாழ்வும் எழுத்தும் சைவத் தமிழ் மக்களுக்கு வழிகாட்டுவன. சைவம் சிதையாமல் அதன் பாரம்பரியப் பெருமையுடன் நின்று நிலைக்கத் துணைபுரிவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பண்டிதர் வந்த பாரம்பரியம்

ஈழத்துச் சைவத்தமிழ்ப் பாரம்பரியம் நல்லூர் **ஆறுமுக நாவலருடன்** ஆரம்பமான என்பது பலரின் கருத்து. நாவலரின் பரந்துபட்ட பணிகளால் ஈர்க்கப்பட்டு அவரின் வழியில் அரும்பெரும் பணிகளை ஆற்றிய அறிஞர்கள் பலர் நாவலரின் பரம்பரை ஒன்றை உருவாக்கினர். இந்தப் பரம்பரையில் வந்த அறிஞரின் நீண்ட வரிசையில் இறுதியாக நிற்பவர் பண்டிதர் கந்தையா அவர்கள்.

நாவலர் காலத்தில் சைவத்தைச் சிதைக்கும் முயற்சிகள் தீவிரமடைந்தன. வேற்று மதத்தவரின் மதமாற்ற முயற்சிகளால் சைவம் அழியும் நிலை ஏற்பட்டது. சைவத்தை அழிவிலிருந்து மீட்டுப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் தன் வாழ்நாள் முழுவதையும் நாவலர் அர்ப்பணித்தார். அதில் வெற்றியும் கண்டார்.

சைவசமயக் கொள்கை என்ன? சைவத்தின் வழிபடு தெய்வங்கள் எவை? என்பவற்றை அறியாமல் இன்று சைவர்கள் பலர் வாழ்கின்றனர். சைவத்துக்கு மாறான கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் இன்று சைவர்கள் மத்தியில் பரப்பப்படுகின்றன. சைவம் சிறிது சிறிதாகச் சிதைகிறது; அழிவை நோக்குகிறது. இந்த அவல நிலையைத் தடுத்து நிறுத்தி சைவத்தை பேணிப்பாதுகாப்பதற்கு தனது தள்ளாத வயதிலும் அரும்பணிகள் ஆற்றியவர் பண்டிதர் கந்தையா அவர்கள்.

ஈழத்துச் சைவசித்தாந்த வளர்ச்சியை நோக்குகையில், நாவலருக்கு முன்னிருந்த **ஞானப்பிரகாசர்** (17ம் நூற்றாண்டு) இந்த வளர்ச்சியின் முன்னோடியாகத் திகழ்கிறார். வடமொழியிலும் தமிழிலும் பல நூல்களை எழுதிய இந்த அறிஞரின் சைவப்பற்றும் உறுதியும் அளவிடற்கரியன. போர்த்துக்கேயர் ஆட்சியில் சைவ நிந்தனை கொடூரமாக இருந்தது. ஆட்சியாளரின் உணவுக்கு பசுமாடு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை எண்ணிப் பார்க்கவும் முடியாதவராய், இரவோடிரவாக பிறந்த மண்ணைவிட்டுத் தமிழகத்துக்குச் சென்றார் ஞானப்பிரகாசர். சிதம்பரத்தில் இவர் தோண்டிய திருக்குளம் ஒன்று இன்றும் *ஞானப்பிரகாசர் குளம்* என்ற பெயரில் உள்ளது. வட இந்தியா சென்று வேதாகமங்கள் பயின்றார். சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான *சிவஞான*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சித்தியாருக்கு* இவர் எழுதிய உரை இவரின் சித்தாந்தப் புலமைக்கும் தர்க்கத் திறமைக்கும் சான்று பகர்வது. இந்த அறிஞரின் சித்தாந்த அறிவும் சைவ சமய ஈடுபாடும் உறுதியும் ஈழத்துப் பாரம்பரியத்தில் சிதையாமல் தொடர்ந்தன.

ஆறுமுக நாவலர் போல் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணிகள் ஆற்றியவர் எவருமில்லை. ஈழத்தில் சித்தாந்தச் சிந்தனை வளர்ச்சிக்கும், பின் வந்த சித்தாந்த அறிஞர்களின் முயற்சிக்கும் உந்து சக்தியாக விளங்கியவர் இவர். திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல், வாழ்நாள் முழுவதையும் பொதுநலத்தில் கழித்த தொண்டர் அவர். சைவத்தை அழியாமல் பேணுவதே அவரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே அவரின் பணிகள் அனைத்தும் விரிந்தன. அன்னியரின் மதமாற்ற முயற்சிகளை முறியடிப்பது, தமிழ் மக்கள் தமது சமயத்தை அறியச் செய்வது, சீர்குலையும் தமிழர் கலாச்சாரம், பண்பாடு, கல்வி ஆகியவற்றைக் காப்பது போன்ற பணிகள் அவரை முழுமையாக ஆட்கொண்டன. இவற்றுக்குத் தேவையாக நூற்பதிப்பு, பிரசங்கம், சமுதாயப் பணி என்று பல தொடர்ந்தன.

இத்தகைய பரந்துபட்ட பணிகளுக்கு இடையில் சைவசித்தாந்த ஆய்வுக்கோ எழுத்துக்கோ அவருக்கு நேரம் கிடைத்திருக்குமெனக் கருதமுடியாது. ஆயினும் நாவலரின் *சைவ வினா விடைத்* தொகுதிகளும்[2] *பெரியபுராணப்* பதிப்புக்கு அவர் எழுதிய *சூசனங்களும்*[3] சைவசித்தாந்த விளக்கமாக அமைந்துள்ளதைக் காணலாம். இது பற்றிப் பண்டிதர் பின்வருமாறு கூறுகிறார்:

*'அவரது முதலாஞ் சைவ வினாவிடை சைவசித்தாந்த அரிச்சுவடியும் இரண்டாம் சைவ வினாவிடையின் முதல் ஐந்தியல்களும் சிவஞான சித்தியார்ப் பொருளறிமுகமுமாம் பெற்றியன... எல்லாவற்றுக்கும் மேலானவையென்னும்படி விளங்கிய அவர் வாய்மை சைவ சித்தாந்த வாய்மை, அவர் தூய்மை சைவசித்தாந்தத் தூய்மை, அவர்பால் விளங்கிய வீறு சைவசித்தாந்த ஞானவீறு, அவர் நடை சைவசித்தாந்த நடை. இவை கூட யாழ். சைவசித்தாந்த உணர்வு விளக்கத்தில் அவர் பதித்து வைத்த சுவடுகள் ஆகும்.'*[4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பதித்த சுவடுகள் பண்டிதரின் சித்தாந்த ஈடுபாட்டுக்கும் தளம் அமைத்தது. நாவலர் முடிக்காமல் விட்ட *பெரியபுராண சூசனங்களை* பண்டிதர் முடித்து நிறைவு செய்ததும் யாழ். சைவ சித்தாந்த உணர்வு விளக்கத்தால் வந்ததே.[5]

சமய வாழ்வில் திருக்கோயில் வழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. கோயில் அர்ச்சகர்கள் சைவ ஆசாரத்தைக் கைக்கொள்வதும் ஆகமவிதிப்படி பூசைகள் செய்வதும் இன்றியமையாதவை. இதற்கு விதிவிலக்கானவர்கள் திருக்கோயில்களில் பூசை செய்யும் தகுதியில்லாதவர்கள். அவர்கள் மக்களின் சமய நம்பிக்கைக்கும் ஈடுபாட்டிற்கும் கேடு செய்பவர்கள். ஆறுமுக நாவலர் இதில் கண்டிப்பாக இருந்தார். இவர்கள் கையால் திருநீறு வாங்கக்கூடாது, இவர்களைக் கோயில் கிரியைகள், இல்லக் கிரியைகளில் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தியவர் நாவலர். நாவலரின் இந்தக் கொள்கைப் பிடிப்பு பண்டிதருக்கும் இருந்தது. இதனை அவரின் பிரசுரங்களில் காணலாம்.

ஆறுமுக நாவலர் (1822-1879) வழியில் அவருக்கு உறுதுணையாக நின்று பெரும்பணிகள் ஆற்றிச் சைவத்தை வளர்த்தவர் **செந்திநாதையர்** (1858-1922). பண்டிதர் பிறந்த அயற்கிராமமான குப்பிழானில் பிறந்த இப்பெருமகன் பத்தாண்டுகள் காசியிலிருந்து வேதாகம ஆராய்ச்சி செய்தவர். இதனால் *காசிவாசி செந்திநாதையர்* என்று அழைக்கப்படுகிறார்.

ஈழத்துச் சைவசித்தாந்த வளர்ச்சியில் செந்திநாதையரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சைவ சித்தாந்த ஆராய்ச்சி நூல்கள், கண்டனங்கள் உட்பட பல நூல்கள் எழுதியுள்ளார். *'காசிவாசி செந்திநாதையர்'* என்ற நூலில்[6] அவரின் இருபத்தொரு வெளியீடுகள் தரப்பட்டுள்ளன. இவரால் இயற்றப்பட்டவை நாற்பத்தைந்துக்கு மேல் என்று கூறுவோரும் உண்டு. இவற்றை விடப் பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளிவந்தவைகளும் வெளிவராதவைகளும் மிகப்பல.

செந்திநாதையர் பற்றிய பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பின்வரும் கூற்று சிந்திக்கற்பாலது:

*"ஆறுமுகநாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர். டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் தமிழுக்குச் செய்த பணி போன்ற பெரும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பணியைச் செந்திநாதையர் சைவ சமயத்துக்கு செய்திருக்கிறார்... அவர் யாழ்ப்பாணத்துக் கலாச்சாரத்தின் பிரதிநிதி."*[7]

உபநிடதங்கள், பிரமசூத்திரம் ஆகியவற்றைக் காட்டி, பிரமம் ஒன்றே உண்மைப் பொருள், அதற்கு வேறாக உண்மைப்பொருள் எதுவும் இல்லை, ஆன்மா என ஒன்றில்லை என ஏகான்மாவாதிகள், மாயாவாதிகள் ஆகியவரின் கொள்கைகள் அமைந்துள்ளன. அவர்கள் கொண்ட உபநிடதங்களிலும் பிரமசூத்திரத்திலும் இத்தகைய கொள்கை இல்லை என்றும், அதனை அவர்கள் வலிந்தும் திரித்தும் பொருள் கண்டனர் என்றும் செந்திநாதையரின் ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகின்றன.

வடமொழி மூலநூல்களில் வேண்டுமென்றே சில மாற்றங்கள் செய்து சைவசித்தாந்தக் கருத்துக்கள் அகற்றப் பட்டிருப்பதையும் செந்திநாதையர் கண்டார். நீலகண்ட சிவாச்சாரியார் போன்றோரின் சித்தாந்தக் கருத்துக்களும் மாற்றப்பட்டு, வேறுபட்ட கருத்துக்கள் புகுத்தப்பட்டிருந்தன. அப்பைய தீட்சிதர், அரதத்த சிவாச்சாரியார் போன்ற அறிஞர்களின் நூல்களிலும் மாறுபட்ட கருத்துக்கள் விசித்திரமாகப் புகுத்தப் பட்டதாக பண்டிதர் கந்தையா எழுதுகிறார். இத்தகைய முரண்பாடுகளை நீக்கி உண்மை நூற் கருத்தை வெளிக்கொணர்வதாக இருந்த ஒரு பெருநூல் செந்திநாதையரின் *நீலகண்ட பாஷ்ய தமிழ்மொழிபெயர்ப்பு.*[8] அந்நூலில் *உபக்கிரகமணிகை* என்ற பெயரில் செந்திநாதையர் எழுதிய இரு நீண்ட பகுதிகள் உண்டு. இதில் ஒவ்வொரு உபக்கிரக மணிகைக்கும் செந்திநாதையருக்கு ஒவ்வொரு கலாநிதிப்பட்டம் கொடுக்கலாம் என்று பண்டிதமணி கணபதிப்பிள்ளை எழுதுவதுண்டு.[9] இவைகளை எல்லாம் தமது எழுத்துக்களில் வெளிக்கொணர்ந்து விளக்கிய பெருமை பண்டிதர் கந்தையாவைச் சாரும்.

மும்மொழிப் புலமை பெற்ற செந்திநாதையரின் நூல்கள் பண்டிதரை வெகுவாகக் கவர்ந்ததை அவரின் நூல்கள் மூலம் அறியலாம். வேத உபநிடதங்களையும் ஆகமங்களையும் மேற்கோள்காட்டி, எடுத்த பொருளை நிறுவும் பண்டிதரின் பாங்கு செந்திநாதையரை அடியொற்றி வந்ததென்று கருத இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திநாதையரின் சமகாலத்தவரான **சபாரத்தின முதலியார்** (1858-1922) ஈழத்துச் சைவ பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெறுபவர். அரசாங்க பதவிகள் வதித்த இவ்வறிஞர் அவர் காலத்தில் மேற்குலவில் பரவிய தத்துவச் சிந்தனைகளையும் அறிந்திருந்தார். அன்று அங்கு புதிதாக எழுந்த சிந்தனைகளில் ஒன்றான கடவுள் மறுப்புக் கொள்கையை தம் இளம் வயதிலே எதிர்த்து எழுதியவர் முதலியார். இந்நூலாசிரியரின் பின்வரும் கூற்று இதனை விளக்குவதாக உள்ளது.

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், சார்லி பிரட்லாப் (Charley Bradlaugh) போன்ற ஆங்கில எழுத்தாளர் பலர், பொருள் முதல் வாதக் கொள்கையை (Materialism) முன்னிறுத்தி கடவுள் மறுப்புக் கொள்கையை (நாத்திகத்தை)ப் பரப்பினார்கள். இதனை எதிர்த்துப் பல கட்டுரைகளை இளமையிலே சபாரத்தின முதலியார் எழுதினார். இக்கட்டுரைகள் பின்னர் *'ஈ.சுர நிச்சயம்'* (1889) என்ற பெயரில் நூலாக வெளிவந்தன." [10]

மேற்கத்திய தத்துவம், சமுதாயச் சிந்தனை ஆகியவற்றை அறிந்திருந்த சபாரத்தின முதலியாரின் சைவசித்தாந்த கொள்கை விளக்கம் அறிவியல் நோக்கில் அமைந்தது. தர்க்க முறையில் எழுதப்பட்டவை அவரின் நூல்கள். இங்ஙனம் எழுதப்பட்ட சிறந்த நூல்களில் விஞ்ஞானரீதியாக சித்தாந்தக் கருத்துக்கள் விளக்கப் பட்டிருத்தலுண்டு. அவரின் அறிவியல் நோக்கும் அணுகு முறையும் பண்டிதர் கந்தையாவின் ஆக்கங்களில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

சபாரத்தின முதலியார் போல அறிவியல் நோக்கில் தர்க்க ரீதியாக எழுதும் சைவ சித்தாந்த அறிஞர் **சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரம்** (1878-1957) அவர்கள். ஆசிரியராக இருந்த இவ்வறிஞரின் எழுத்துக்கள் தெளிந்த சிந்தனையுடன் படிப்பவர் எளிதாக விளங்கக்கூடியவாறு அமைந்தவை. ஆங்கிலத்திலும் தமிழிலும் இவர் எழுதிய நூல்கள் பல.

மெய்கண்ட சாத்திர நூற்பொருளை நன்கு அறிவதற்கு சைவசமய பாரம்பரியத்தையும் அதன் பின்னணியையும் அறிந்திருப்பது நல்லது. இந்த அறிவில்லாமல் சைவ சித்தாந்தப் பொருளை விளக்க முனைபவர்கள் சில நேரங்களில் தவறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கத்தைத் தருவதுண்டு. மூல நூல்களைப் படித்துத் தெளியாமல், அவற்றை விளக்கும் தமிழ் ஆங்கில நூல்களைப் படித்து எழுதுபவர்கள் பலர் சைவசித்தாந்தக் கருத்துக்களைத் திரித்தும் தவறாகவும் தருவதுண்டு. பல ஆண்டுகளின் முன் வெளிவந்த, வயலெற் பரஞ்சோதி என்ற கிறித்தவப் பெண்மணி ஒருவரின் ஆய்வு நூல் இத்தகைய தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தது. இந்த ஆய்வின் அடிப்படையில் தமிழகத்துப் பல்கலைக் கழகம் ஒன்று அவருக்கு கலாநிதிப் பட்டம் (Doctorate) அளித்தது குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்தத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்களைச் சிவஞான போதக் கருத்துக்களாகக் காட்டி எழுதப்பட்ட இந்நூலுக்கு மறுப்பு எழுத தருமபுர ஆதீனம் எண்ணியது. இதனை எழுதுவதற்கு ஏற்றவர் யாழ்ப்பாணம் சைவப்பெரியார் சிவபாத சுந்தரமே என்று முடிவு செய்து அவரைக்கொண்டு அதனை எழுதுவித்தது இந்த ஆதீனம். சைவப் பெரியார் எழுதிய இந்நூல் `An Outline of Sivagnanabodham wih a Rejoinder to a Christian Critic'[11] என்பது. இந்நூல் மறுப்புரையாக மட்டுமின்றி, சிவஞான போதச் சூத்திரங்களை எளிமையாகவும் தெளிவாகவும் விளக்குவதாகவும் உள்ளது. சைவ சித்தாந்தத்தின் நுண்மைப் பொருட்களும் அதில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் தமிழில் க.கணேசலிங்கம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு மலேசியாவில் இந்த ஆண்டு வெளியிடப்பட்டது.)

சைவப் பெரியாரின் நடை போலன்றி, பண்டிதரின் நடை படிப்பவருக்குச் சிறிது கடினமாக இருக்கும். ஆனால், பண்டிதர் சித்தாந்த நுண்பொருளை விளக்கும் பாங்கு சைவப் பெரியாரினதை ஒத்து இருப்பதை, இருவர் நூல்களையும் கூர்ந்து நோக்கின், அறியலாம்.

சைவப் பெரியார் சிவபாதசுந்தரத்தின் அறிவியல் நோக்கையும் தருக்கத் திறமையையும் மெய்யியல் விவேகத்தையும் பிற குணங்களையும் பலவாறாக விரித்துப் பண்டிதர் தனது *லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையிலே*[12] குறிப்பிட்டுள்ளார். இது சைவப் பெரியாரிடம் பண்டிதருக்குள்ள மதிப்பையும் ஈடுபாட்டையும் உணர்த்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துச் சைவசித்தாந்த அறிஞர் மரபில் வந்தவர் **மு. திருவிளங்கம்** அவர்கள். நியாயவாதியாகவும் நீதிபதியாகவும் தொழில் செய்தவர் இவர். *'சைவாசார அனுட்டான சீலராகவும், சிவபூஜா துரந்தரர்'* ஆகவும் விளங்கியவர் என்று பண்டிதர் அவர்கள் இவரைப் பற்றிக் கூறுகிறார். "பெருமதிப்புக் குரியவர்களான திருவிளங்க தேசிகர் அவர்கள் சமய சாதகர்களின் வரிசையைச் சேர்ந்தவர்கள்" எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவரைப் போற்றுகிறார்.

திருவிளங்கமும் பல நூல்கள் எழுதியுள்ளார். *சிவஞான சித்தியாருக்கும்*[13] *சிவப்பிரகாசத்திற்கும்*[14] சிறந்த உரைகள் செய்துள்ளார். இவரின் சிவப்பிரகாச உரைபோல் சிறந்த உரை இன்றுவரை வெளிவரவில்லை.

சைவ சித்தாந்த நூல்களிலே புதுமையும் ஆழ்ந்த கருத்துக்களும் கொண்ட நூல் உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய *சிவப்பிரகாசம்.* இந்நூலுக்கு உரை எழுதிய திருவிளங்கம், விளங்க முடியாத நுண்பொருள் பலவற்றை விளக்கியுள்ளார். *சித்தியாருக்கும் சிவப்பிரகாசத்திற்கும்* அவர் எழுதிய உரைகளில் சித்தாந்த பேரறிஞர் எனப் போற்றப்படுபவரின் கருத்துக்கு மாறுபட்டதாக சில கருத்துக்கள் இருக்கும். அறிஞரிடை வேறுபட்ட பொருள் தரும் இடங்கள் தெளிவுபடுத்தப் பட்டிருக்கும். ஆயினும் அவரின் கருத்துக்கள் அறிஞரால் மறுக்க முடியாதவையாக, ஆணித்தரமானவையாக அமைந்திருக்கும். திருவிளங்க தேசிகரின் இந்தச் சிறப்பை பண்டிதரிலும் காணலாம்.

மேற்கூறப்பட்டவர்கள் போல இன்னும் பலர் ஈழத்துச் சைவ சித்தாந்த பாரம்பரியத்தில் வந்தவர்கள். விஞ்ஞான மாணவன் என்று குறிப்பிடப்படும் **அ. விசுவநாதபிள்ளை, திக்கம் செல்லையா, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சேர் பொன்னம்பலம் இராமநாதன்** போன்ற பலர் இந்த அறிஞர் வரிசையில் நிற்பவர்கள். இவர்களின் சைவசித்தாந்த மேதமையை அறிந்து போற்றியவர் பண்டிதர். இந்த அறிஞரின் பாரம்பரியத்தில் தன்னை இணைத்த இப்பெருமகன் தத்துவ உலகில் பதித்த சித்தாந்தச் சுவடுகள் காலத்தால் அழியாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஞானப்பிரகாசரும் சிவசமவாதமும்

ஈழத்துச் சைவசித்தாந்த அறிஞர் வரிசையில் முதலில் காணப்படுவர் ஞானப்பிரகாசர். நாவலருக்கு இரு நூற்றாண்டுகளின் முன் வாழ்ந்த இந்த அறிஞர் வடமொழியில் ஒன்பது நூல்களும் தமிழில் *சிவஞான சித்தியாருக்கு* உரையும் எழுதியுள்ளார்.

இவரின் *சித்தியார்* உரையில் சைவசித்தாந்தத்துக்கு முரணான ஒரு கருத்துப் புகுத்தப்பட்டுள்ளது என சித்தாந்த அறிஞர் கண்டிப்பதுண்டு. முத்தியடைந்த உயிர் சிவனுக்குச் சமமாக இருக்கும் என்ற *சிவசமவாதக் கொள்கையை* இவர் உரை கொண்டுள்ளது என்பது அவர்களின் கருத்து. இக்கருத்தில், ஞானப்பிரகாசரைக் கண்டிப்பவர்களில் முக்கியமானவர் 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சித்தாந்தப் பேரறிஞரான சிவஞான முனிவர்.

தனது உரை சிவசமவாதக் கொள்கையைப் பிரதிபலிக்க வில்லை என்று ஞானப்பிரகாசரே கூறியிருக்கிறார். எடுத்த கொள்கையை எவரும் மறுக்க முடியாத வகையில் தர்க்க முறையில் விளக்கும் திறமை ஞானப்பிரகாசருக்குண்டு. சிவஞான முனிவர் 'சைவ சித்தாந்த மரபு விரோதக் கொள்கையாளருக்குச் சிம்ம சொப்பனமாய்' திகழ்பவர் என்பது சித்தாந்த அறிஞர்களின் முடிவு.

சிவஞானமுனிவரை மறுக்க, பொதுவாக, அறிஞர்கள் துணிவதில்லை. இந்த நிலையில் ஞானப்பிரகாசர் உரையை நடுநிலை நின்று ஆய்ந்து தனது முடிவுகளைப் பண்டிதர் தரும் பாங்கு சித்தாந்த உலகில் அவர் பதித்த சுவடாக அமைந்துள்ளது. இது பற்றிச் சிந்திக்க முன் சைவசித்தாந்த வளர்ச்சி பற்றிச் சிறிது சிந்திப்பது பயனுள்ளது.

சைவ சித்தாந்தக் கூறுகள் வேத உபநிடதங்கள், ஆகமங்கள், பழந்தமிழ் நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றில் காணக் கூடியவை. ஆயினும், சைவ ஆகமக் கருத்துக்களே சைவ சித்தாந்தம் உருவாவதில் முக்கிய இடம் பெற்றன. *ஆகமாந்தம்* என்று சைவசித்தாந்தம் கூறப்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணம். ஆகம நூல்கள் அனைத்தும் இன்று கிடைப்பதில்லை. நல்ல காலமாக ஆகமங்களின் அறிவு சார் பகுதியாக, ஞான காண்டமாக, அமைந்த கருத்துக்களைத் தமிழில் *மெய்கண்ட சாத்திர நூல்கள்* என்ற பெயரில் ஞானிகள் தந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தக் கொள்கையை விளக்கும் பல நூல்கள் இருப்பினும் பதினான்கு நூல்கள் மட்டுமே மெய்கண்ட நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றை எழுதிய அறிஞர்கள் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர்கள். ஆகமங்களை நன்கு அறிந்தவர்கள். *சிவஞான சித்தியார்* என்ற சிறந்த மெய்கண்ட நூலின் ஆசிரியரான அருணந்தி சிவாச்சாரியார் 'சகலாகம பண்டிதர்' என்று போற்றப்படுவர். காலத்தால் வேறுபட்ட இந்த நூல்களில் கருத்து வேறுபாடு எவற்றையும் காணமுடியாது. இந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து மெய்கண்ட சாத்திர நூல்கள் என்று தொகுத்தளித்த அறிஞர்களின் சித்தாந்தப் புலமையும் தொலைநோக்கும் போற்றத்தக்கன; சைவ அறிஞர்களால் பின்பற்றப்பட வேண்டியன.

இந்த நூல்களுக்கு முன்வந்த *ஞானாமிர்தம்*[15] என்ற நூல் சிறந்த சைவசித்தாந்த நூல். சிவஞானமுனிவர் தனது *மாபாடியத்தில்* இதிலிருந்து பல மேற்கோள்கள் காட்டியுள்ளார். ஆயினும் இது மெய்கண்ட சாத்திர நூல்களில் ஒன்றாக வைத்தெண்ணப்படவில்லை. காரணம் இதில் சித்தாந்த தத்துவத்துக்கு முரணானதாகத் தெரியும் ஒரு கருத்தே. சிவனைப் போல் சிவனின் சக்தியையும் அறிவுடைப் பொருளாகக் கொள்வது சைவசித்தாந்தக் கொள்கை. ஞானாமிர்த ஆசிரியர், ஒரு இடத்தில் சிவனின் கிரியா சக்தியை அறிவற்ற ஒன்றாகக் கூறிவிட்டார். அந்த அடி வருமாறு:

'............*மற்றவனோ,*
*காரியத் திசைந்த பேரிசைப் பெருவலி*
*அறிவின் றறிவதை யொத்துப் பிறிவின்*
*றிருந்து* ......'

இதன் பொருள்,

*'அந்தப் பரமசிவனுக்கு கிரியா சக்தியாய்ப் பொருந்திய பெரிய கீர்த்தியையுடைய மகா சத்தி இருக்கும்படி சொல்லின், அறிவின்றி இருந்தும் அறிவுடைய பதார்த்தத்தைப் போன்று, பரமசிவனைப் பிரிதல் இன்றியே ....'*

இந்தக் கருத்து சைவசித்தாந்தத்துக்குப் பொருந்தாததென சிவஞானமுனிவர் தனது பாடியத்தில் விளக்கி மறுக்கிறார். சித்தாந்தக் கொள்கைக்கு உடன்பாடற்ற ஒரேயொரு கருத்துக்காக *ஞானாமிர்தம்* மெய்கண்ட சாத்திர நூல்களில் இடம் பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த அறிஞர்கள் சைவசித்தாந்தக் கொள்கையைப் பேணுவதில் எத்தகைய உறுதியுடன் இருந்தார்கள் என்பதைக் காட்ட இது ஒன்றே போதும். இங்ஙனம் வளர்ந்ததாற்றான் சைவ *சித்தாந்தம் தமிழர்களின் மத்தியில் பிறந்த சிறந்த தத்துவம்* என்று ஜி.யு.போப் போன்ற உலக அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.[16]

இந்தச் சித்தாந்த மரபில் வந்து, சித்தாந்த விரோதக் கொள்கைகளை, மறுக்க முடியாதபடி, மறுத்தவர் சிவஞான முனிவர். சித்தாந்தக் கருத்துக்களாகத் தரப்படுபவைகள் உயர் ஆராய்ச்சியில் மட்டுமல்ல, பொதுநோக்கிலும் சைவசித்தாந்தத்துக்கு ஒத்துவராதவைகளாக இருக்கக்கூடாது. இதில் சிவஞான முனிவர் உறுதியான அணுகு முறை கொண்டிருந்தவர் என்பதை அவரின் நூல்களிலிருந்து அறியலாம்.

ஞானப்பிரகாசரின் கருத்தையும் அதனை வன்மையாகக் கண்டிக்கும் சிவஞான முனிவர் கருத்தையும் ஆராய்ந்து, '*சைவ சித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள்*'[17] என்ற நூலில் எழுதும் பண்டிதர் மேற்குறிப்பிட்ட செய்திகளை நன்கறிந்தவர். ஞானப்பிரகாசர் தனது கருத்தைத் தர்க்கத்திறமையோடு நிறுவுவதை, இவற்றைக் கருத்திற் கொண்டு பண்டிதர் ஆராய்கிறார்.

முத்தியில், ஒரு வகையில், உயிர் சிவத்துக்குச் சமமாக இருக்கும் என்ற கருத்து ஞானப்பிரகாசருக்கு முன்னரே சைவ சித்தாந்த உலகில் நிலவியதொன்று. *மிருகேந்திரம், சர்வஞ்ஞானோத்திரம்* ஆகிய ஆகம நூல்களில் இது பிரதிபலிக்கப் படுகின்றது என்பது அறிஞர் கருத்து. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த *அஷ்டப்பிரகரண நூல்களின்* ஆசிரியர்கள் சிலரும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த *தத்துவப்பிரகாசிகை* உரையாசிரியரும், *சித்தியாருக்கு* உரை எழுதிய மறைஞான தேசிகரும் இன்னும் சிலரும் இக் கருத்தைத் தழுவி எழுதியுள்ளனர் என்று பண்டிதர் முதலில் விளக்குகிறார். பின்னர் வந்த சித்தாந்த நூலாசிரியர்களும் உரையாசிரியர்களுமான சிவாக்கிரகயோகிகள், சிவஞான முனிவர் போன்றோர் இக்கருத்தை விமர்சித்து ஒதுக்குவதைக் கூறுகிறார். அவர்களின் மறுப்புக்களை விரிவாக எழுதியபின் ஞானப்பிரகாசர் தமது சிவசமவாதக் கோட்பாட்டை நிறுவும் திறன் ஆராயப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசர் கருத்தின்படி முத்தியில் ஆன்மாக்கள் சிவனுக்கு சமமாக இருப்பினும் சிவ ஆணை வியாபகத்துக்கு (விரிவுக்கு) உட்பட்டே இருக்கும். அவற்றின் செயல்கள் சிவனின் ஆணைக்குட்பட்டு, அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கும். அதனால் அவை ஐந்தொழில் செய்யவும் கூடும். ஆனால் இது தாமாகச் செய்யாமல், சிவனாணைக்குட்பட்டு செய்யப்படுவதாகும். ஆகவே சிவன் மட்டுமே பஞ்சகிருத்திய கர்த்தா (ஐந்தொழில் செய்யும் உரிமையுள்ளவர்). ஆன்மாக்கள் அதனைச் செய்பவர்களே ஒழிய கர்த்தாக்கள் ஆகார். இது போன்ற கருத்துக்களைத் தரும் ஞானப்பிரகாசர், தான் சிவசமவாதியல்ல என்று தனது சித்தியாருரையில் பின்வருமாறு எழுதுகிறார்.

*'நியாயப்படியானதான ஆன்மாவின் முத்திநிலை இதுவென்கிறேன் என்பதற்காக நான் சிவசமவாதியல்லேன்; அநேகசுரவாதியுமல்லேன்'.*[18]

ஞானப்பிரகாசரின் இந்த விளக்கத்தை எடுத்துக் கூறிய பண்டிதர், அவர் கருத்தை பல்வேறு வழிகளில் நியாயப்படுத்துவதைக் காணலாம். இந்த முயற்சியில் சிவஞான முனிவர் கருத்தை மறுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

சைவசமயத்தில் *சிவோகம்பாவனை* என்பது ஆன்மாவின் படிமுறை வளர்ச்சியில் இடம் பெறுவது. பாம்பு தீண்டிய ஒருவனின் நஞ்சை நீக்குவதற்கு விஷவைத்தியன் கைக்கொள்ளும் ஒருமுறை *கருடபாவனை.* வைத்தியன் தன்னைக் கருடனாகப் பாவனை செய்து பாம்பின் விஷத்தை நீக்குவது இந்த முறை. இதில் மனத்தளவில் அவன் கருடனாகவே மாறி விடுகிறான். இதுபோல சிவனாகத் தன்னைக் கற்பிப்பது *சிவோகம்பாவனை.* இது போலியான கற்பனை இல்லையென்று சிவஞானமுனிவர் தன் *சிவஞான மாபாடியத்தில்*[19] எழுதுகிறார். ஞானப்பிரகாசர் இதனைச் சிவம் குறித்த பாவனை, சிவசாதி குறித்த பாவனை என இரு திறப்படுவதாக விரித்து எழுதுகிறார். இங்ஙனம் அவர் விரித்து எழுதுவது தர்க்கமுறையில் அமைந்து, மறுக்கமுடியாத வாதத்திறமையுடன் காணப்படுகிறது. இதனைக் கண்ணுற்ற பண்டிதர், ஞானப்பிரகாசர் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'இங்ஙனம் தான் சிவசமவாதியுமல்ல, வேதாந்தியுமல்ல எனத் தானே நிராகரித்துக்கொண்டு ஞானப்பிரகாசர் தழுவும் சிவசமவாதம் ஒரு தனித்துவமானதும் புதுமையானதுமாம்.*[20]

ஞானப்பிரகாசரின் கருத்துச் சிவசமவாதம் சார்ந்ததா, இல்லையா என்ற ஒரு ஐயம் பண்டிதரின் மேற்கண்ட தொடரிலிருந்து காணமுடிகிறது. ஆயினும் பண்டிதர் தனது ஆய்வைத் தொடர்ந்து அது *சிவசமவாதம் தழுவியது அல்ல* என்ற முடிவுக்கு வருகிறார். தவிர்க்க முடியாத நிலையில், பிறர் பிடியில் நின்று செய்வதுபோல், ஆன்மாக்கள் பஞ்சகிருத்தியஞ் செய்தல் உண்டு. தாமாகச் செய்வதில்லை. '*அரசனுக்கு அடக்கமும் விசுவாசமுமான பத்தினியாய் இருக்குமளவில் அரசிக்கும் தார்மீகரீதியான ஆட்சியுரிமைக்கான மகத்துவம் உண்டு என்பதை மறுப்பதெப்படி? சாமானிய தாம்பத்திய உறவுரிமை ஒன்றானே அது நிருபிதமாகுமே*', என்றெல்லாம் பண்டிதர் தனது விளக்கத்தை விரிக்கிறார். இறுதியில், *'ஞானப்பிரகாசர் கொள்கையின் யதார்த்தமும் அதுவேயன்றி வேறில்லை'* என்ற முடிவுக்கு வருகிறார். இதில் வரும் மன்னன்-மனைவி உதாரணம் சிவஞான முனிவரால், ஞானப்பிரகாசர் உரையை மறுப்பதற்கு எடுத்துக் கொண்டதாகும். இதனையே பண்டிதர் எடுத்துக் கொண்டு ஞானப்பிரகாசருக்குச் சாதகமாக விமர்சிக்கிறார். அதுமட்டுமன்றி, இந்த உதாரணம் *'ஞானப்பிரகாசர் கொள்கைக்குப் பகைப்புலமாதலுக்கெதிர் நட்புப்புலமாதலே பொருத்தமாகிறதென்றும்'* எழுதுகின்றார்.[21]

இங்ஙனம் பலப்பட எழுதி ஞானப்பிரகாசர் கருத்தை சித்தாந்திகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக நிறுவும் பண்டிதர் திறன் போற்றத்தக்கது.

இவ்வாறு, சித்தாந்த ஆய்வு செய்த பண்டிதர், ஞானபிரகாசரின் கருத்தை தக்க ஆதாரங்களுடன் சைவ சித்தாந்தத்துக்கு மாறுபடாத வகையில் ஆதரிக்கிறார். இதில், சிவஞான முனிவரை மறுக்க வேண்டிய இடங்களில் மறுப்பதைக் காணமுடிகிறது. அப்படி மறுக்கின்ற இடங்களில் அவர் சிவஞான முனிவரின் உயர்தகைமைக்கு எத்தகைய ஊறுமின்றி மறுக்கிறார். சிவஞான முனிவருக்கு பண்டிதர் அளிக்கும் மேலான இடமும், ஞானப்பிரகாசரின் கருத்தில் அவர் கண்ட யதார்த்தமும் அவரின் சித்தாந்தத் தெளிவும் அவரைப் பின்வருமாறு எழுத வைக்கிறது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இது சைவ சித்தாந்த விஷயங்களில் அதி உயர்மட்ட விஷயம். இத்தகு விசாரணை அளவில் இது முடிவுற்று விட்டதாகாது. ஆயின், சிவஞான சுவாமிகள் விளக்கத்தில் தலையிட்டு இவ்வளவும் விசாரித்தது அவர் அறிவினும் கூடிய அறிவும் உண்டெனா இங்கு காட்டும் குறிப்போ எனில் அன்று. அது கனவிலுங் கருதற்பாலதன்று. பின்னையென்னெனில் ஞானப்பிரகாசர் காட்டும் சிவசமவாதக் கருத்துக்கு உயர்தர அறிவினாலும் சாதாரணமாக நிராகரிக்கப்படாத அளவுக்கு ஒரு யதார்த்தம் உண்டு எனத் தோற்றுமளவேயாம்."* [22]

உயர்தர அறிவினாலும் நிராகரிக்கப்பட முடியாத அளவுக்கு ஞானப்பிரகாசர் கருத்துக்களில் பண்டிதர் கண்ட யதார்த்தத்திற்கு அடிப்படை அவரின் தர்க்கமுறையிலான வாதத்திறமையே. ஞானப்பிரகாசரின் சிந்தனைத் தெளிவும் தர்க்கத் திறனும் அறிஞர்களால் போற்றப்படுவது. சித்தாந்த அறிஞர் டாக்டர் சேனாபதியின் பின்வரும் கூற்று இதற்கு எடுத்துக்காட்டு.

"He holds the view that souls at release are equal to Siva in every respect, a view which is interesting and ably argued but totally in variance with Siddhanta... Though Gnanaprakasar attempts to read *Siva Samavada*, into Siddhiyar, he deserves credit for following an unusual line of thought."[23]

*"முத்தியிலே எல்லாவகையிலும் சிவத்திற்கு ஒத்த நிலையில் உயிர்கள் இருக்கும் என்ற கருத்தை இவர் கொண்டுள்ளார். இந்தக் கருத்து சிந்தனையைத் தூண்டுவது; வாதத் திறமையுடையது; ஆனால் சித்தாந்தத்துக்கு முற்றிலும் வேறுபட்டது... சிவ சமவாதத்தை சித்தியாரில் காண விழைந்தாலும், ஞானப்பிரகாசர் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த சித்தனையைக் கடைப்பிடிப்பது பாராட்டத்தக்கது."*

ஞானப்பிரகாசரின் இந்தத் தனிச் சிறப்பு வாய்ந்த சிந்தனைக்காகவே அவரின் சித்தியார் உரைக்கு சித்தாந்த உலகில் முக்கிய இடம் கொடுக்கலாம், சித்தியாருக்கு எழுதப்பட்ட ஆறு பழைய உரைகள் சிறந்தவையாகக் கருதப்பட்டு, *'அறுவர் உரை'* என்ற பெயரில் முன்னர் வெளிவந்தது. அண்மைக்காலங்களில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்து பதிப்புக்களில், ஞானப்பிரகாசர் உரை தவிர்க்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இது சைவசித்தாந்தத்துக்கு எந்தவகையிலும் அரண் செய்வதாகாது. *சித்தாந்த ஆராய்ச்சிக்கு இன்றியமையாத நூல் ஞானப்பிரகாசரின் சித்தியார் உரை.*

ஞானப்பிரகாசர் சித்தியாரில் சிவசமவாதத்தைக் காண விழைகிறார் என்ற டாக்டர் சேனாதிபதியின் கூற்றுக்கும் வலுவான ஆதாரங்கள் இல்லை. இதனை அவரின் நூலிலிருந்தும் உணர முடிகிறது.

முத்தியில், சிவானுபவத்தை அனுபவிப்பதற்கு உயிருக்குக் கருவிகள் வேண்டும். ஆனால் மலநீக்கம் பெற்ற நிலையில், மாயா கருவிகளும் இல்லாத பொழுது, இது எப்படி உண்டாகும் என்ற கேள்வி எழுகிறது. அந்நிலையில் மாயா கருவிகள் அருட்கருவிகளாக மாறி சிவானுபவத்திற்குத் துணை செய்யும் என்பது சித்தாந்திகள் பலரின் கருத்து. சிவனருளே கருவிகளாக நின்று துணைபுரியும் என்ற கருத்தும் சித்தாந்த நூல்களில் காணக் கூடியது. இந்த நிலையில் சிவமாகவே உயிர்கள் நிற்கும்; சிவன் ஆணைப்படி பஞ்சகிருத்தியங்களும் செய்யும் நிலை உண்டாகும். இதற்குச் சரித்திர ஆதாரங்கள் உண்டு என்று கூறும் பண்டிதர் கந்தையா, திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரால் இறந்தவர்களை உயிர்ப்பித்த வரலாற்றைச் சுட்டிக்காட்டுகிறார். சிவன் ஐந்தொழில் செய்வது அவனின் தடத்த நிலையாகிய உருவ நிலையில். முத்தியில் உயிர் பெறும் அருள் கருவிகளையும், சிவன் ஆணையின் வழி செய்யப்படும் சம்பந்தர் போன்றோரின் செயல்களையும் கருத்திற்கொண்டால் சிவனுக்குச் சமனான நிலையை எண்ண வேண்டியுள்ளது. ஞானப்பிரகாசர் இதனை உருவச் சிவசமவாதம் என்ற பெயரில் விளக்குகிறார். அருவச் சிவசமவாதம் என்று இன்னொன்றைக்கூறி இதற்கு இடமே இல்லையென்றும் குறிப்பிடுகிறார். உருவச் சிவசமவாதத்திலும் ஐந்தொழில் செய்யும் உரிமை உயிர்களுக்கு இல்லை; அவை செய்வது சிவ ஆணையினாற்றான் என்ற கருத்தையும் அவர் வலியுறுத்துகிறார். இதனால் *ஞானப்பிரகாசர் கூறும் சிவசமவாதக் கருத்து உண்மையில் சிவசமவாதமல்ல* என்பது பெறப்படும். பண்டிதரின் விளக்கங்கள் இதனைத் தெளிவு படுத்துவதாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பேரின்பத்திற்கு ஆணவம்?

சைவசித்தாந்த நூல்களில் ஒன்றான '*உண்மை விளக்கம்*'[24] சித்தாந்தம் கருதும் உண்மைப் பொருட்களைக் கூறுவது. அதில் முத்தியடைந்த உயிரின் நிலைபற்றிய கருத்தும் வருகிறது. இதில் உள்ள ஒரு கருத்து சிந்தாந்த அறிஞரிடை வேறுபட்ட விளக்கங்களுக்கு இடமளிக்கிறது. குறித்த பாடல் வருமாறு:

*'முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்*
*சுத்தஅனு போகத்தைத் துய்த்தல் அணு- மெத்தவே*
*இன்பங் கொடுத்தலிறை இத்தைவிளை வித்தல்மலம்*
*அன்புடனே கண்டுகொள் அப்பா'.*

இப்பாடலின் பொருள்: மாணாக்கனே முத்தியிலிருக்கும் முதற்பொருட்களாகிய இறை, உயிர், மலம் ஆகிய மூன்றின் முறைமையை (சொல்கிறோம்) கேள். சுத்தநிலை அனுபவமாகிய பேரின்பத்தைத் துய்த்தல் அணுத்தன்மையுடன் நின்ற ஆன்மா. அந்த இன்பத்தைக் கொடுப்பவன் இறைவன். இதனை விளைவிப்பது ஆணவமலம்.

இதில், இறை உயிர் குறித்த தொடர்களில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. ஆணவமலம் குறித்த தொடர்தான் கருத்து வேறுபாட்டிற்கு இடமளிக்கிறது.

சைவசித்தாந்தத்தின்படி இறைவனைப் போல உயிர்களும் பாசப் பொருட்களும் அனாதியானவை. செம்பிற் களிம்பு போல உயிருடன், அனாதிகாலந்தொட்டு, இயற்கையாகவே இருப்பது ஆணவம். உயிரின் ஆற்றல்களை மறைத்து அதற்குக் கட்டாக (பாசமாக) இருப்பது அது. இறையருளால் உயிர் பிறவிகளை எடுத்து, வினை செய்து, அனுபவம் பெறுகிறது. அனுபவத்தினால் அறிவு வளர்கிறது; அறிவு வளர வளர ஆணவத்தின் பிடி தளர்கிறது. இறுதியில் ஆணவப்பிடி முற்றாக நீங்க, உயிர் விடுதலை அடைகிறது. இதுவே வீடு அல்லது முக்தி எனப்படும். வீடு அடைந்த உயிர் அதன் பேறாகிய (வீடு பேறாகிய) சிவானந்தத்தை அனுபவிக்கிறது. இந்த நிலை ஆணவ மலப்பிடிப்பு நீங்கிய பின்னரே கைகூடுவது. ஆனால் குறித்த *உண்மை விளக்கம்* பாடல் இந்த அனுபவத்தை விளைவித்தல் *ஆணவ மலம்* என்று கூறுகிறது. (இங்கே *மலம்* என்று சொல்லப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம்). இது அறிஞர்கள் பலருக்குப் புதிராய் அமைந்து, அவரவர் கருதியபடி விளக்கங்கள் தர இடமளிக்கிறது. இவ்வகையில் வெளியான சில அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துப் பண்டிதர் ஆராய்கிறார்.[25]

*1. முத்தியில் ஆணவம் திருந்திய நிலையில் உள்ளது.* - டாக்டர் தேவசேனாபதி.

*2. ஆணவம் குறைவது மிகுவது திருந்துவது உபசாரமே.* - நல். முருகேசு முதலியார்

*3. ஆணவம் எவ்விடத்தும் தொழிலாற்றிக் கொண்டேயிருக்கும். நித்தியப் பொருளுக்கு என்றும் அதன் கூறுகள் ஒரு படித்தாயேயிருக்கும். அதனால் முத்தியிலும் ஆணவம் உண்டு. ஆனால் தொழிற்படுவதில்லை.* -பழ. இரத்தினம் செட்டியார்.

மேற்குறிப்பிட்ட விளக்கங்கள் முத்தியிலும் ஆணவம் உயிரிடத்தில் இருக்கிறது; அது உயிருக்குக் கட்டாக இல்லை, என்ற பொதுவான கருத்தைத் தருகின்றன. இது சித்தாந்தக் கருத்துக்கு முரணின்றி இருக்கிறது. ஆனால், *'இத்தை விளைவித்தல் மலம்'* என்ற தொடரை விளக்குவதாக இவை இல்லை.

டாக்டர் தேவசேனாபதி திரோதானசத்தி சிற்சக்தியால் மாறுவது போல் ஆணவத்தின் திருந்திய நிலையை விளக்குகிறார். சத்தி சித்துப் பொருளாதலான் அது தன் விருப்பத்திற்கு மாறுதல் கூடும்; ஆணவம் சடப்பொருளாதலால் அது இப்படி மாறமுடியாது. சமயகுரவரின் ஒழுகலாற்றையும் உதாரணம் காட்டி, அங்கு ஆணவம் திருந்திய நிலையில் உள்ளது என்று டாக்டர் அவர்கள் விளக்குகிறார். ஆனால், சமயகுரவர் அவனருளால் அனைத்தையும் செய்பவராதலால் இந்த விளக்கம் ஏற்றதாக இல்லை. மற்றைய இரு அறிஞர்களின் விளக்கங்களும் இவ்வாறே, வெவ்வேறு காரணங்களால், ஏற்றதாக அமையவில்லை. இவற்றை எடுத்துக்கூறி, இவ்வாறான கருத்துக்களின் பொருந்தாமையைத் தக்க சான்றுகளுடன் பண்டிதர் விளக்குகிறார். ஆகமங்களை உதாரணங்காட்டி, *'முத்தி நிலையில் ஆணவ சக்தி உயிரைவிட்டு நீங்கியே விடும் என்பதே முடிநிலைப் பொருளாகின்றது'* என்ற முடிவுக்கு வருகிறார். இந்த முடிவுக்குத்தக குறித்த *'இத்தை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளைவித்தல் மலம்'* என்ற தொடரை விளக்குவதுதான் அவரின் சைவத்தமிழ்ப் புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது.

ஆகமக் கருத்துக்களைக் கொண்டவை சைவசித்தாந்த நூல்கள் என்றாலும், அவை தமிழ்ச் செய்யுள் நூல்களே. தமிழிலுள்ள சாத்திர நூல்களுக்குப் பொருள் காண்கையில் செய்யுள் உத்தி முறைகளைத் தழுவியே பொருள் காண வேண்டும்; இது அவ்வாசிரியர்கள் உள்ளக்கிடக்கை என்பது பண்டிதரின் கருத்து. சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கண நுட்பங்களிலும் தர்க்க விதிகளிலும் பயிற்சியின்றி சித்தாந்த சாத்திரச் செய்யுட்களை விளங்கிக்கொள்ளுதல் இயலாதென்பதும் அவர் கருத்து.

உயிரைப் பிடித்த மலம் விலக, இறையருளால் இன்பம் விளைகிறது. 'இத்தை' என்ற சொல் இன்ப விளைவாகிய இச்சூழ் நிலையைக் குறிக்கிறது. இந்தச்சூழ்நிலை விளைவதற்கு மலம் எப்படிக்காரணமாகும் என்பதே கேள்வி. இதனை விளக்க பண்டிதர் தமிழ்க்கவிதை உத்திகளை உதாரணங் காட்டுகிறார். அதில் ஒன்று பின்வரும் திருக்குறளுடன் தொடர்புடையது.

*'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை.'*

இக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர், 'கெடுப்பதூம்' என்ற சொல்லுக்கு, 'பூமியின் கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும்' என்று பொருள் கூறுகிறார்.[26] இதனை எடுத்துக் கொண்டு பண்டிதர் தனது கருத்து விளக்கத்தைத் தொடர்கிறார். இங்கு 'பெய்யாமை' என்ற எதிர்மறை கெடுதலுக்குக் காரணமாயிருப்பதால் 'மழை' காரணம் என்று கூறப்படுகின்றது. இதுபோன்றே 'மறையாமை' என்ற எதிர்மறை இன்ப விளைவுக்குக் காரணமாய் இருப்பதால் 'மலம்' காரணம் என்று கூறப்படுகின்றது. ஆகவே 'இத்தை விளைவித்தல் மலம்' என்ற தொடரில் 'மலம்' என்பது 'ஆணவ மலம் உயிரை மறையாமை' என்றே பொருள் கொள்ள வேண்டும்.

செய்யுள் உத்தியை மட்டுமன்றி அதில் கற்பனை வழித் தரப்படும் பொருளுண்மையையும் பண்டிதர் கைக்கொள்கிறார். திருநாவுக்கரசு நாயனாருக்கு சூலை நோய் வந்து, சமணசமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கி, சிவவாழ்வு வாழும் பாக்கியம் கிட்டுகிறது. இதனைத் திருத்தொண்டர் புராணம், *'இவ்வாழ்வு பெறத்தகு சூலையினுக் கெதிர்செய் குறை என்கொல் எனத் தொழுவார்'*,[27] என விளக்குகிறது. திலகவதியாரின் வேண்டுதலும் இறையருளும் அப்பரின் சிவவாழ்வுக்குக் காரணமாக இருந்தவை.

ஆயினும் தன்னைப்பிடித்த சூலைநோய் வருத்தமே சிவவாழ்வைக் கூட்டியது என்று அப்பர் அதனைப் போற்றுகிறார். சிவப்பேற்றுக்குச் சூலை காரணம் என அப்பர் காட்டிய வழியில், இங்கு சிவானந்தப் பேற்றுக்கு ஆணவம் காரணம் என்று காட்டப் பட்டிருக்கிறது.

இவ்வாறு, தமிழ்ச் செய்யுள் உத்தியின் அடிப்படையில் ஏற்ற விளக்கம் அளித்து சைவசித்தாந்த நுட்பங்களை ஆராயும் திறன் பண்டிதருக்கே உள்ள தனிச்சிறப்பு. தமிழ் இலக்கண அடிப்படையிலும் ஆராய்வதில் வல்லவர் பண்டிதர் அவர்கள். குறிப்பிட்ட உண்மை விளக்கத் தொடருக்கு இத்தகைய விளக்கம் தந்து பொருளுரைக்கும் முறையை காஞ்சிபுரம் சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அறிமுகம் செய்துள்ளார். இவரையும் இவர் போன்ற பிற அறிஞர்களையும் சைவ சித்தாந்த உலகிற்கு அறிமுகம் செய்து அவர்களின் சித்தாந்த விளக்கங்களைப் போற்றியவர் பண்டிதர்.

சைவசித்தாந்தம் தமிழ் மக்களுடைய தத்துவம். பழந் தமிழ் நூல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் விரவியுள்ளன. தமிழிலக்கண அமைப்பு முறை சித்தாந்த தத்துவத்தைப் பிரதிபலிப்பது. திருக்குறளில் எல்லாச் சமய தத்துவங்களின் கருத்துக்களையும் காணமுடியும். அதிலுள்ள கருத்துக்கள் எல்லாம் எல்லாச் சமயங்களுக்கும் உடன்பாடானவையல்ல. ஆனால் சைவத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்கள் எவற்றையும் அதில் காணமுடியாது. சித்தாந்தக் கருத்துக்கள் மலிந்த திருக்குறள் சைவர்களின் வாழ்வியல் நூலாகவும் சமய நூலாகவும் விளங்கும் பெருமையுடையது. இதனாலேயே, திருக்குறளைப் போற்றிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் திருக்குறளை இயற்றிய வள்ளுவரை *திருவள்ளுவ நாயனார்* எனத் தமது நூல்களில் போற்றுகிறார். இங்கே இந்நூலாசிரியரின் பின்வரும் கருத்து சிந்தனைக்குரியது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'ஆழ்ந்து நோக்கின், திருக்குறளில் பல்வேறு சமயக் கருத்துக்கள் இருக்கின்றன என்பதும், அவற்றில் மேலோங்கி நிற்பன சைவம் சார்ந்த கருத்துக்களே என்பதும் பெறப்படும். பிறசமய தத்துவங்களை விடத் தமிழகத்துச் ஸ்சவசமய தத்துவமே அவருக்கு ஏற்புடையது என்பதும் அறியப்படும்.'*[28]

நாவலர் வழியில் வந்த பண்டிதர் அவர்கள் தனது சைவசித்தாந்த விளக்கத்திற்கு தொல்காப்பியம், திருக்குறள், சங்கத்தமிழ் நூல்கள் ஆகியவற்றைத் துணையாகக் கொள்கிறார். பல மேற்கோள்களை இத்தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுவதை அவரின் நூல்களில் காணலாம். *'சைவ சித்தாந்தம் தமிழர் ஆக்கம்'* என்றும் இதனை *'இன்றைய உயர்மட்ட அறிவியலாளர் பலரும் ஏகோபித்துக் கூறிவிட்டார்கள்'* என்றும் எழுதுகிறார். இதற்குச் சான்று பகர்வதாக அவரின் பின்வரும் கூற்று அமைந்துள்ளது.

*'சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் தமிழ் மொழியிலேயே வாய்த்துள்ளன. இவையனைத்தையும் ஒரு கூட்டாக எண்ணுவார்க்கு, தமிழ்க் கலாச்சாரப் பின்னணியிலேயே சைவ சித்தாந்தக் கலை சோபிப்பது புலனாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், திருமுறைகள் முதலிய அனைத்து நூல்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிந்து கிடக்கும் நிலையும் சுவாராஸ்யமானதொன்று. ஆதலால் சைவசித்தாந்த விளக்கம் தமிழ்மொழி விளக்கத்தை இன்றியமையாததென்பது சொல்லாமலேயமையும். இதனால் உயர் தமிழ் இலக்கிய இலக்கண மரபு வழிப்பாடான தமிழ் அறிவு நிலை சைவ சித்தாந்த விளக்கத்துக்கு ஒரு அடிப்படைத் தேவை என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.'*[29]

இவ்வாறு எழுதும் பண்டிதர் தமிழ் இலக்கண இலக்கியங்கள், திருமுறைகளில் ஆழ்ந்த புலமையுடையவர் என்பது அறிஞர்கள் அறிந்ததே. தமிழ்க் கலாச்சாரப் பின்னணியில் நிற்கும் இம்மேதையின் சித்தாந்த விளக்கங்கள் அறிஞரையும் கவரும் சிறந்த கருத்துக்களைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தத்துவ விசாரணை

சைவ சித்தாந்தத்தில் *மாயை* ஒரு உள் பொருள். அது பொய்ப்பொருளல்ல. மாயையின் காரியமாக முப்பத்தாறு தத்துவங்கள் கூறப்படுகின்றன. இவற்றில் *புருடன்* என்பது ஒன்று. இன்னொன்று *சித்தம்*. இவைபற்றிய விளக்கங்கள் அறிஞருக்கிடையில் வேறுபடுகின்றன; இவை விசாரணைக்குரியன.

**புருட தத்துவம்**

*காலம், நியதி, கலை, வித்தை, அராகம்* என்ற *வித்தியா தத்துவங்கள்* ஐந்தையும் சட்டையாகக் கொண்டு ஆன்மா இருக்கும் நிலையில் அது *பஞ்சகஞ்சுகன்* என்று கூறப்படுகிறது. இந்த ஐந்தையும் பொருந்தி ஆன்மா புருட தத்துவமென நிற்கும் என்பது சிவஞான முனிவர் கருத்து.

'நிச்சயம் புருடனாகி பொதுமையில் நிற்பன்' என்ற தொடர் சித்தியாரில் வருவது. இதற்கு சிவஞானமுனிவர் தரும் விளக்கம் வருமாறு:

*'பஞ்சகஞ்சுகமுடையவுயிர், அவிச்சை முதலிய மூன்றனையுமேகதேசத்தின் மருவிப் பொதுவகையால் புருடதத்துவமெனப் பெயர் பெற்று அப்போகத்தில் உன்முகமாய் (ஆன்மா) நிற்கும்.'*[30]

தனது மாபாடியத்திலும் சிவஞானமுனிவர் "...*பஞ்சகிலேசம் என்னும் பும்ஸ்துவமலம் உடையனாய்ப் புருடதத்துவம் என நிற்பன்,*" என எழுதுகிறார். அவர் கருத்தை ஒத்ததாகவே பிற உரைகாரர் பலரின் கருத்தும் உள்ளது.

தத்துவங்களை மாயாகாரியங்களெனக் கொண்டால், ஆன்மாவைப் *புருடதத்துவம்* எனக்கொள்ளல் தவறானது என்பது எனது (இந்நூலாசிரியரின்) கருத்து. மாயை நித்தமாய், சடமாய், இறைவனுக்குப் *பரிக்கிரக சக்தியாய்* இருப்பதென்பதும், அதிலிருந்து தத்துவங்கள் தோன்றுகின்றன என்பதும் சிவஞானமுனிவர் உட்பட்ட சித்தாந்த அறிஞர்கள் அனைவரும் ஒத்துக் கொண்ட உண்மை. இந்த நிலையில் "ஆன்மா புருடதத்துவமென நிற்பன்" என்ற முனிவரின் கருத்து விளங்க முடியாததாக உள்ளது. இது குறித்த விளக்கம் பெறுவதற்கு நான் அணுகிய அறிஞர்கள் சிவஞான முனிவர் கருத்துக்கு உடன்பாடற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கருத்துப் பற்றிச் சிந்திக்கவும் விரும்பவில்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணத்து சித்தாந்த மூதறிஞர் பண்டிதர் அவர்களுக்கு எழுதினேன்.

எனது கருத்தில், *காலம் முதலிய ஐந்து தத்துவங்களையும் பொருந்திய நிலையில் ஆன்மா புருடன் எனப் பெயர்பெறுகிறது. புருட தத்துவம் என்பது ஆன்மாவைப் பொருந்திய இந்த ஐந்து தத்துவங்களின் கூட்டு. புருடன் எனப் பயர் கொண்ட ஆன்மா வேறு. புருட தத்துவம் வேறு. ஐந்தையும் பொருந்திய ஆன்மாவே புருட தத்துவமல்ல.* எனது இந்தக் கருத்துக்கு சிவாக்கிரக யோகிகளின் உரையும்[31] அரண் செய்வதாக இருந்தது. பண்டிதருக்கு நான் எழுதிய கடிதத்தில் இவற்றையெல்லாம் எழுதி, அவரின் மேலான கருத்தை வேண்டினேன். பண்டிதரின் பதில் எனது கருத்தை ஆமோதிப்பதாகவும், சைவசித்தாந்த ஆய்வில் என்னை ஊக்குவிப்பதாகவும் இருந்தது.

12.1.98ல் அவர் எனக்கு எழுதிய பதிலில்[32] "*உங்கள் புருட தத்துவ ஆராய்ச்சி எனக்கும் மஹாபிரீதி தரும் ஒரு விஷயம்... அதுபற்றி நீங்கள் நன்கறிந்த உண்மைதான் சரியான உண்மை,*" என்று எழுதியது எனக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. இப்படி எழுதிய பண்டிதர், தீட்சையில் *தத்துவசுத்தி* செய்யப்படும் காலத்தில், புருடதத்துவசுத்தி முடிந்து விட்டால் பிறகு அதற்கு இருப்பில்லை எனவும் எழுதினார். இதனை திருக்கோயில் திருவிழாவுடன் ஒப்பிட்டுப் பின்வருமாறு எழுதியது சிந்தனைக்கு விருந்தளிப்பதாக இருந்தது.

*'திருவிழா முடிந்தால் உற்சவ விக்கிரகத்துக்கு வேலை இல்லைத்தானே. உடலின் உயிர் மூலமூர்த்தி, புருடன் உற்சவ விக்கிரகம், என்பது எனது கற்பனை. 1978இல்* ***நாவலர் பிள்ளைத் தமிழ்*** *எழுதியபோது இக்கற்பனைக்கும் இடங்கொடுக்கப் பட்டிருந்தது'.*

குறிப்பிட்ட *பிள்ளைத் தமிழ்* பாடலையும் அனுப்பியிருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் எழுதிய வார்த்தைகள் அவரின் ஆழ்ந்த சித்தாந்த அறிவுக்கும் ஈடுபாட்டிற்கும் சான்று பகர்வன. அவை சித்தாந்த அறிஞருக்குப் பயன்படுமென்பதால் கீழே தருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உற்சவ விக்கிரகம் மூலமூர்த்தியின் சக்தி கொண்டுலாவுவது. திருவிழாக் காலக் கிரியைகளின் விளைவு இது. புருடதத்துவமும் உயிரின் சக்தி கொண்டு லடாலத்திலிருந்து மூலாதாரம் வரை இறங்கியும் ஏறியும் உலாவுவது. ஆலயத்தில் உற்சவ விக்கிரகத்துக் கென்ன தன்மையோ அதே தன்மையே புருட தத்துவத்துக்கும் ஆம். மூலமூர்த்தியின் சக்தியைக் கொண்டுலாவுவதற்கு பொருத்தமாகச் சிற்பாசாரி வடித்தது ஆலய விக்கிரகம். வியாபியாகிய உயிர் குறிப்பிடப்படும் சில சில தத்துவங்களிற்பட்டு உலாவுதலை எடுத்துணர்த்துதற்காகச் சைவசித்தாந்தம் என்ற தத்துவச் சிற்பி தன்னில் தானாக உருவாக்கிக் கொண்டுள்ளது புருட தத்துவம்.*

*நீங்கள் குறிப்பிட்டிருக்கும் சிவாக்கிரக யோகியின் விளக்கத்துக்கும் இது ஒக்கும்.*

*இனி, இவ்விளக்கத்தின் பிரகாரம் புருடன் இயல்பின் முக்கிய அம்சம், அது ஒரு 'கொண்டு காவி' ஆய் இருத்தல். உற்சவ விக்கரகமும் (மூல மூர்த்தியின் சக்தியைக்) கொண்டு 'காவி' தானே.*

*குறித்த செய்யுள் எழுதின 1978 இல் நான் சிவாக்கிரக யோகியின் கருத்தை அறிந்திருந்ததில்லை. சமீபத்தில் 'கைலாசபதி ஸ்மிருதி[33] பற்றி எழுதும்போது சிவாக்கிரகயோகியின் சிவநெறிப் பிரகாசத்தையும் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. அதில் குறித்த 'கொண்டு காவி'ப் பண்பு (புருடனின் கொண்டு காவிப் பண்பு) மிக நகாசாகக் குறிப்பிடப்பட்டிருக்கக் கண்டு வியப்புற்றேன். இப்போ நூல் கைவசமில்லை. செய்யுளைக் குறிப்பிட முடியவில்லை. அதில் ஒரு செய்யுளில் புருடன் பற்றிப் பேசுகையில் 'முடவனைக் குருடன் காவிச் செல்வது போல' என யோகி குறித்திருக்கிறார். சித்தியாருரையில் வெளிவந்த அவர் கருத்தின் பின்விளைவு இவ்விளக்கம் ஆகலாம்.*

*குறித்த இவ்விரவங்கள் உங்கள் மேலாய்வுப் பணிக்கு உதவக்கூடும். அதிகம் எழுத முடியவில்லை. புத்தக வேலை ஒன்று முடிக்க வேண்டிய கட்டம். பிறகு அவகாசமுள்ள போது மீதி...."*

மேற்காட்டிய பண்டிதரின் கடிதம் அவரின் சித்தாந்தப் புலமையை மட்டும் காட்டவில்லை. தற்பெருமையில்லாத் தகைமை, தன்னிலும் அறிவு குறைந்தவரின் சொற்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற்கொண்டு நடுநிலை நின்று விளக்கம் அளித்தல், எவரின் நன்முயற்சியையும் ஊக்குவித்தல் போன்ற அரிய பண்புகளையும் காட்டுகின்றன. இவை அவரின் ஆளுமையின் கூறுகள்; சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டு.

## சித்தம் என்னும் அந்தக் கரணம்

*மனம், புத்தி, சித்தம், அகங்காரம்* ஆகிய நான்கையும் *அந்தக் கரணங்கள்* என்று கொள்வது சித்தாந்த மரபு. வித்தியா தத்துவங்களான *காலம்* முதலியவற்றை *அக அந்தக் கரணங்கள்* என்றும், இவற்றைப் *புற அந்தக் கரணங்கள்* என்றும் வகைப்படுத்துவதுண்டு.

இந்த அந்தக் கரணங்களில் *சித்தம்* குறித்த விளக்கங்கள் உரையாசிரியர்களிடம் வேறு படுகின்றன. முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்றாகச் சித்தம் உள்ளது. இதனை ஒரு தத்துவமாகக் கொள்ளாமல், இதற்குப் பதில் *குண தத்துவத்தை* வைப்பதுமுண்டு. செயற்பாட்டு முறையில், இந்த நான்கு அந்தக்கரணங்களின் ஒழுங்கும் உரையாசிரியர்களிடை மாறுபட்டு இருப்பதும் உண்டு.

இத்தகைய கருத்து வேறுபாடுகளை நீக்கி ஒத்த கருத்தை உருவாக்கும் நோக்கில், சில ஆண்டுகளின் முன், ஒரு நீண்ட கட்டுரை எழுதினேன். சித்தியாருக்கு உரை எழுதிய சிவஞான முனிவர் உட்பட்ட பழம்பெரும் அறிஞர்களின் உரைகளையும் அண்மைக்கால அறிஞர்களின் உரைகளையும் அடியொற்றி, *சாங்கியம்* போன்ற பிற இந்திய தத்துவக் கருத்துக்களையும் கருத்திற்கொண்டு, இக்கட்டுரை எழுதப்பட்டது. கட்டுரை மிகவும் நீண்டது. சிவஞானமுனிவர் கருத்துக்கு ஒவ்வாத கருத்துக்களையும் கொண்டிருந்தது.

*சிவஞானபோதம்* நாலாம் நூற்பாவின் முதல் அதிகரணத்துக்கான உதாரண வெண்பா,

*'சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதா யாங்காரம்*
*புந்தியா யாய்ந்து மனமாகிப் - பந்தித்து'*

என்று முதலிரு அடிகளைக் கொண்டுள்ளது.[34]

இவ்வெண்பாவில், செயற்பாட்டு முறையில் அந்தக் கரணங்களின் ஒழுங்கு, *சித்தம் - ஆங்காரம் - புத்தி - மனம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வருகிறது. இந்த வெண்பாவிற்கு உரை விளக்கம் செய்த சிவஞானமுனிவர் இந்த ஒழுங்கை, *சித்தம் - மனம் - ஆங்காரம் - புத்தி*, என மாற்றியுள்ளார். இதற்கு அவர் தரும் விளக்கம் "செய்யுள் ஆதலின் முறை பிறழ வைத்தார்" என்பதே. இந்த ஒழுங்கு முறையைப் பிற உரையாசிரியரும் பின்பற்றியுள்ளனர்.

உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலில் அந்தக் கரணங்களின் செயற்பாட்டு முறை பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

*'அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்*
*அந்தமனம் புத்தி ஆங்காரம் - சிந்தையிவை*
*பற்றியது நிச்சயித்து பலகால் எழுந்திருந்தங்கு*
*உற்றதுசிந் திக்கும் உணர்'*[35]

அந்தக் கரணங்களின் செயற்பாட்டு ஒழுங்கு, முறையே (அடைவே), மனம்-புத்தி-ஆங்காரம்-சித்தம், என வருகிறது. இங்கும் இந்த ஒழுங்குமுறையை மாற்றியே சிவஞான முனிவரும் பிற உரையாசிரியரும் உரை கண்டுள்ளனர். இதற்கும் தரப்படும் காரணம் 'செய்யுளாதலின் முறை பிறழ வைத்தார்' என்பதே.

சைவ சித்தாந்த நூல்கள் எழுதிய அறிஞர்கள் அருள் ஞானிகள் மட்டுமன்றி, யாப்பமைதி கொண்ட செய்யுள் இயற்றும் சிறந்த புலவருமாவர். இவர்கள் தம் செய்யுள் இயற்றுகையில் 'முறை பிறழ' வைக்கும் நிலை ஏற்பட்டிருக்கும் என்பது நம்ப முடியாததாக இருக்கிறது.

அண்மைக்காலத்தறிஞரான அருணைவடிவேலு முதலியார் மேற்காட்டிய சிவஞான போத வெண்பாவுக்கு உரை எழுதுகையில், மனம்-அகங்காரம்-புத்தி-சித்தம் என்ற ஒழுங்குமுறையைச் செயற்பாட்டின் அடிப்படையில், கொண்டுள்ளார்.[36] இவ்வாறு பிற ஆசிரியர்களும் வேறுபட்ட உரைகளைத் தந்துள்ளனர்.

இது தவிர, சித்தம் மனத்தின் ஒரு கூறு என்றும், விருத்தியென்றும், வேறு என்றும், சித்தம் என்றொரு தத்துவம் இல்லை என்றும் பல கருத்துக்கள் உள்ளன. இக்கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிப்பதாக பின்வரும் சித்தியார், சிவப்பிரகாச அடிகள் உள்ளன.

*'சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை அதுவும் செய்யும்'*
-சித்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'..................*சிந்தைநினை வையம்*
*வந்துதரு மனமொழிய வகுப்பொ ணாதே'* -சிவப்பிரகாசம்

(வியத்தம்-வெளிப்படத் தோன்றுவது; அவ்வியத்தம்-வெளிப்படாதிருப்பது; இங்கு மூலப்பிரகிருதியைக் குறிக்கிறது.)

ஈழத்துச் சித்தாந்த அறிஞர் மு. திருவிளங்கம் *சித்தியாருக்கும் சிவப்பிரகாசத்திற்கும்* உரை எழுதியவர். அவரின் சிவப்பிரகாச உரைபோல் சிறந்த உரை இதுவரை வெளிவரவில்லை. மேற்காட்டிய சித்தியார் அடிக்கு அவர் தரும் விளக்கம் வருமாறு.

*'மூலப்பிரகிருதி குணவடிவாய் நிற்றலேயன்றிச் சித்த வடிவாயும் நிற்கும். குணவடிவாய் நின்று முக்குணங்களைத் தோற்றுவிக்க, ஆன்மா அவற்றைப் பொருந்தி, அக்குணங்களின் வடிவாய் நிற்கும் சித்த வடிவாய் நின்று, போக சிந்தனையை உண்டாக்க, குணங்களின் மயமாய் நிற்கும் ஆன்மா விடய போகங்களை இரசித்து அவற்றில் அழுந்தும்.'*[37]

இவ்வாறு உரை தந்த திருவிளங்கம், மேற்காட்டிய சிவப்பிரகாசத் தொடரை விளக்கும்போது, "*மனத்தின் சந்தேக நிலையே சித்தமாம். சித்தம் என்று ஒரு தனித்தத்துவம் இல்லை*", என்கிறார்.[38]

சித்தம் மனத்தின் விருத்தி என்ற சிவஞான முனிவர் கருத்தை ஏற்றுக்கொண்டால், '*சித்தமாம் அவ்வியத்தம்*' என்ற சித்தியார் தொடரை விளங்குவதில் இடர்ப்பாடு ஏற்படும். திருவிளங்கம், சிவாக்கிரகயோகி ஆகியோரின் உரைகள் சித்தியார் தொடரையும் சிவப்பிரகாசத் தொடரையும் ஒன்றுக்கொன்று முரணாகாத வகையில் விளக்குகின்றன. இந்த இரண்டு உரைகளையும் அடக்கியதாக ஞானப்பிரகாசர் உரை உள்ளது. (இவற்றை விரித்து எழுதுவது இச்சிறு நூலில் இயலாததொன்று.)

அந்தக்கரணங்களின் செயற்பாடுகள் குறித்த சித்தாந்த நூல்கள், திருமுறைகள் முதலியவற்றை ஆராயும் பொழுது, மூலப்பிரகிருதியே குணரூபமாவும் சித்த ரூபமாகவும் பரிணாமம் அடைகிறதென்று கொள்ள வேண்டியுள்ளது. சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்றுடனும் இணைந்தும் அவற்றுக்குத் துணையாகவும் செயற்படுகிறது என்றும் கருத வேண்டியுள்ளது. இதற்கு, எனக்குப் பழக்கமான மின் பொறியியல் துறைசார்ந்த உதாரணம் ஒன்றைக் காட்டலாம். ஒரு வீட்டில் மின்விளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிகிறது, குளிரூட்டி குளிரைத் தருகிறது, மின் விசிறி காற்றைத் தருகிறது. அவற்றின் செயற்பாட்டில் அவற்றுடன் இணைந்து, அவற்றுக்குத் துணையாக, இருப்பது மின்னோட்டமே. இவ்வாறே சித்தம் மற்றைய மூன்று அந்தக்கரணங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இது எனது கற்பனையில் கண்ட உதாரணம்.

எனது இந்தக் கருத்துக்கு அரண்சேர்ப்பதாகப் பண்டிதர் எனக்கெழுதிய 13.10.97 திகதிக் கடிதத்தின் பின்வரும் பகுதி இருந்தது.[39]

*'சைவசித்தாந்த நூல்களில் பற்றாப்பணயமான விளக்கத்திற்கு இடமாய் இருக்கும் ஒரு அம்சம் சித்தம். சிவாகமங்களில் சித்தம் என்ற அந்தக் கரணம் வேறாகத் தெரித்துக் கூறப்படவில்லை. ஆகமத்தை நேராக அனுசரிக்கும் பாங்கினாற் போலும் சிவஞான சித்தியாரிலும் சித்தம் தனித் தத்துவமாகத் தோன்ற வைக்கப்படவில்லை என்ற நிலை அதன் உரைகளால் தெரிய வருகிறது...'*

இங்ஙனம் தொடர்ந்து எழுதி, அவர் சித்தாந்த ஆலோசகராக கொள்ளும் ஏழலை அருளானந்தசிவம் (பொன்னையாப் பரியார்) அவர்களின் உதராணம் ஒன்றைத் தந்து தனது கருத்தை விளக்குகிறார்.

*'இது இவ்வாறாக, இனி மற்றொன்று - இறைத்த நீர் பாத்தியில் சென்று பரந்து பாத்தியின் வடிவமாய் நிற்பது போல, பெறப்பட்ட அறிவு உள்ளத்தில் தனக்கொரு வடிவம் அமைத்து நிற்பதே சித்தம் என எங்கள் சைவசித்தாந்த அறிஞர் பொன்னையாப் பரிகாரியார் விளக்கியதை நான் நேரிற் கேட்டிருக்கிறேன். நூல் வழக்கில் எங்கும் காணப்படாத புது விளக்கமாக இது இருப்பதால் நமது யாழ். சைவசித்தாந்த மேதையின் சுவடுகளில் இதுவும் ஒன்றாய் இருக்கலாம் என நினைக்கிறேன். அத்துடன், சித்தத்தை இறுதியிற் கொண்டு கூறிய உண்மை விளக்கக் கருத்திற்கு இதுவே சரியாகலாம் எனவும் படுகிறது. ஏன்? கருவியாம்... என்ற சித்தியார் செய்யுளிலும் சித்தம் முடிவு நிலை தானே வகிக்கிறது.*

*என் எண்ணம் எழுந்த வாக்கில் இவையெல்லாம் எழுதியுள்ளேன். இதன் பொருந்துமாறு பற்றிய தீர்வு உங்களையும் உங்கள் சைவசித்தாந்த நேயர்களையும் பொறுத்தது.'*

பண்டிதரின் இந்தச் சித்தாந்த விளக்கத்தின் 'பொருந்துமாறு பற்றிய தீர்வு' வழங்கும் தகுதி எவருக்குத்தான் உண்டு? பண்டிதருக்கே இதுவும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. ஹவாய் ஆதீனத்தின் கருத்து வேறுபாடு

சைவசித்தாந்த நூல்களும் திருமுறைகளும் தமிழில் கவிதை வடிவிலுள்ளன. கவிதை வரிகளைப் பிரித்து இடத்திற்கேற்றவாறு பொருள் காண வேண்டும். அத்துடன் சைவசித்தாந்த அடிப்படை அறிவும் வேண்டும். இவை இல்லையெனில் தவறாகப் பொருள் காண நேரலாம்.

"திருநீறிட்டார் கெட்டார்" என்ற அடியை "திருநீறு இட்டு ஆர் கெட்டார்" எனப் பதம்பிரித்துப் பார்த்தால் சைவத்தில் முக்கிய இடம்பெறும் திருநீற்றின் பெருமை விளங்கும். இங்ஙனம் இன்றி நேர் பொருள் காணின், 'திருநீறு பூசிக் கெட்டார்' என்ற சைவத்துக்கு உடன்பாடற்ற விளக்கமே தெரியும். இத்தகைய விளக்கத்தைத் தந்து, சைவத்துக்கு உடன்பாடற்ற கொள்கையையும் ஒருவர் நிலை நாட்டலாம். ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த டாக்டர் பி. நடராஜன் என்பவரின் திருமந்திர மொழிப்பெயர்ப்பு இவ்வாறான தவறான கொள்கையைத் தருகிறது.

ஹவாய் ஆதீனத்தை நிறுவி அதன் முதல்வராக இருந்தவர் *சுவாமி சுப்பிரமுனியா* என்னும் பெயர் கொண்ட அமரிக்கர். யாழ்ப்பாணத்துச் *சிவயோக சுவாமிகளின்* சீடராக இருந்து ஆன்மீக வளர்ச்சியுற்றவர். ஹவாயில் சைவக் கோயில் நிறுவி சைவ சமயத்தைப் பரப்பும் ஆன்மீக ஞானியாக விளங்கியவர். இவ்வாதீனத்தின் செயற்பாடுகளும் வெளியீடுகள் பலவும் மேலை நாட்டாரை ஈர்த்துச் சைவத்தில் நாட்டம் கொள்ள வைத்துள்ளன; சைவத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றுள்ளன. ஆயினும் இவ்வாதீனத்தின் திருமந்திர மொழிபெயர்ப்பும்,[40] வேறு சில சைவசித்தாந்தம் தொடர்பான வெளியீடுகளும் உடன்பாடற்ற கருத்துக்களைக் கொண்டுள்ளன.

*'பதி பசு பாசம்'* எனத் தொடங்கும் திருமந்திரப் பாடல்[41] சைவசித்தாந்தத்தின் முப்பொருள் உண்மை கூறுகிறது. அதில் வரும் கடைசியபடி *'பதியணுகிற் பசு பாசம் நிலாவே'* என்று வருகிறது. இதன் பொருள் 'பதியாகிய இறைக்கு முன்னால் பசுவாகிய ஆன்மாவைப் பற்றிய பாசம் நில்லாது நீங்கும்' என்பது. இது சித்தாந்த உண்மை. ஹவாய் ஆதீன வெளியீட்டில் இறைவனை அணுகினால் ஆன்மாவும் பாசப்பொருட்களும் இருக்கமாட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இறை ஒன்றே மெய்ப்பொருள், உயிர் உட்பட்ட மற்றவையெல்லாம் அதன் பரிணாமங்கள் அல்லது தோற்றங்கள் என்ற வேதாந்தம் சார்ந்த கருத்துக்கு இவ்வெளியீடு துணை செய்கிறது.

இவ்வாதீனத்தின் `Monism and Pluralism in Saiva Siddhanta' என்ற நூலிலும் தவறான கொள்கைகள் சித்தாந்தக் கொள்கையாகக் காட்டப்பட்டுள்ளன. வேதாந்தக் கூறான *பிரம பரிணாமவாதம்* என்ற கொள்கை, கிறித்தவ சமயப் பின்னணியில், சித்தாந்தத்தில் புகுத்தப்பட்டுள்ளது. சைவசித்தாந்தத்தின் தனித்துவத்தை மாற்றி வேறு தத்துவக் கருத்துக்களைப் புகுத்தியுள்ளனர். சைவசித்தாந்தம் உலக அரங்கில் முக்கிய இடம்பெறுவதற்கு, அதன் மரபுவழி வந்த சில கொள்கைகள் மாற்றப்பட வேண்டுமென்பது இவ்வாதீனத்தின் கருத்தாக உள்ளது. இவ்வாதீனத்தின் இத்தகைய கொள்கையையும் கருத்துக்களையும் மறுத்து முன்னரே சில அறிஞர்கள் எழுதியுள்ளனர். இவர்களில் மலேசியா நாட்டு அறிஞர் வே. க. பாலசுந்தரம் பி.ஏ. (இலங்கை) அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.[42]

மலேசியா வெளியீடான பண்டிதர் அவர்களின் '*சைவ சித்தாந்தத்தில் மாயை உண்மை*'[43] என்ற சிறு நூலும் ஹவாய் ஆதீனத்தின் பொருத்தமற்ற கருத்துக்களை மறுக்கிறது. பண்டிதரின் சைவ சித்தாந்தத் தெளிவுக்கும், ஆராய்ச்சித் திறனுக்கும் இது எடுத்துக்காட்டாக உள்ளது.

பல்வேறு கருத்துக்களைக் கொண்ட வேத நூல்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பொதுவகையாக உணர்த்துவன. ஆனால் ஆகமங்கள் பெரும்பாலும் தெளிவுடன் சித்தாந்த கருத்துக்களைத் தருகின்றன. இதனாற்றான் சைவத்துக்கு '*வேதம் பொது ஆகமம் சிறப்பு*'[44] என்று திருமந்திரப் பாடல் கூறுகிறது. சைவ ஆகமங்களின் ஞானபாதக் கருத்துக்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களாக மெய்கண்ட சாத்திர நூல்களில் தரப்பட்டுள்ளன. திருமுறைகளை சைவ ஆகம உண்மைகளுக்கு மாறுபடாத வகையில் ஆராய்தல் அவசியம். இதில் பண்டிதர் தெளிவாக இருந்தவர் என்பதை அவரின் கூற்றிலிருந்தே அறியலாம்.

*'இவர்களில் எவர் அருளிப்பாட்டினையும் அணுகும் முறையால் அணுகிச் சைவத்துக்கு சிறப்பு எனப்பட்ட சிவாகம உண்மைகளுக்கு மாறுபடா வகையில் ஆராய்ந்து கைக்கொள்வதற்கே உரியோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாம். சைவ சித்தாந்த ஆய்வியலிற் செல்வோர்க்கு இது முக்கியமான ஒரு நிபந்தனையும் ஆம்.*[45]

இங்ஙனம் கூறும் பண்டிதர், சிவாகமங்களிலும் மேலான இடத்தை தமிழிலுள்ள மெய்கண்ட சாத்திர நூல்களுக்கு கொடுத்தவர் என்பதையும் காணமுடிகிறது. இதனைப் பின்வரும் அவரின் வார்த்தைகளும் உணர்த்துகின்றன.

*'மெய்கண்ட சாஸ்திரங்கள் சிவாகமஞ் சொல்லியதை அப்படியே மணப்பாடமாக ஒப்புவியப்பவைகளுமல்ல.... இத்தியாதி காரணங்களால் ஒருவகையிற் சிவாமங்களினும் முதன்மை மிக்கனவாகக்கூட மெய்கண்ட சாஸ்திரங்களைக் கொள்ள வேண்டும் நிலையுமுண்டு.*[46]

பண்டிதரின் இந்தக் கருத்து ஆறுமுக நாவலருக்கும் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் தமிழிலுள்ள மெய்கண்ட சாத்திர நூல்களுடன் தமிழ்வேதமாகிய திருமுறைகளுக்கும் மேலான இடம் கொடுத்தவர். இதுவே பண்டிதரின் நிலையும். மேற்காட்டிய *'பதி பசு பாசம்'* எனத் தொடங்கும் திருமந்திரப் பாடலை மெய்கண்ட நூல்கள், திருமுறைகளை ஆதாரம் காட்டிப் பண்டிதர் விளக்கி, ஹவாய் ஆதீனத்தின் பொருந்தாக கொள்கையைத் தனது *'சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை'* என்ற நூலில் மறுக்கிறார். யாழ்ப்பாணத்துக் கந்தபுராண கலாச்சாரத்தில் ஊறிய பண்டிதர் கந்தபுராணத்தையும் தனது விளக்கங்களுக்குத் துணையாகக் கொள்கிறார்.

சைவசித்தாந்தம் உட்பட்ட இந்திய தத்துவங்கள் வேத மகாவாக்கியங்களை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் அவற்றுக்குத் தரும் விளக்கங்களில் வேறுபடுகின்றன. ஆனால், *'ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரமம்'* என்ற தொடருக்கு *'பிரம்மம் ஒன்றேதான் உண்மைப்பொருள்'* என்று வேதாந்தியர்கள் போன்ற பலரும் உரை கண்டனர். இதனால் உயிரையும் மற்றைய பொருட்களையும் பிரமத்தின் பரிணாமம் என்றோ வெறும் தோற்றமென்றோ கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இது பல கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு விடைகாண முடியா நிலையையும் ஏற்படுத்தியது. விடை காண முடியாத நிலையில் வார்த்தைகளால் விளக்க முடியாதது என்ற கருத்தில் *'அநிர்வசனீயம்'* என்றனர்.

*'ஏவம் ஏவ'* என்ற தொடர் *பிரம்மம்* ஒன்றே என்கிறது. இதனை சிவஞான போதமும் *'ஒன்றென்ற தொன்றே காண்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒன்றே பதி'* என்று விளக்குகிறது. *'ஒருவன் என்னும் ஒருவன் காண்க'* என்று திருவாசகம் கூறுகிறது. *'அத்விதீயம்'* என்ற தொடர் *இரண்டல்ல* என்ற பொருள் கொண்டிருக்கிறது. முதலில் *ஏவம் ஏவ* என்று சொல்லியபின் *'அத்விதீயம்'* என்ற தொடருக்கான தேவை என்ன? என்ற கேள்வியை சைவ சித்தாந்த ஆசிரியர்கள் முன்பு எழுப்பிச் சிந்தித்துள்ளனர். *'ஏகம் ஏவ'* என்ற தொடர் பிரமப் பொருளின் தனித்தன்மையும், *'அத்விதீயம்'* என்ற தொடர் பிரமம் *'ஏனைப் பொருள்களான பசு பாசங்களுடன் இரண்டன்மை தோன்ற நிற்கும்'* நிலையையும் விளக்குகின்றன. இச்சித்தாந்த விளக்கத்தை பண்டிதர் தந்து, ஹவாய் ஆதினத்தின் *பிரமபரிணாம வாதக் கருத்தை* மறுக்கிறார். மறுக்கும் வகையில், பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் என்று கொண்ட வேதாந்திகளும் பிறரும் விளக்கமுடியாத மாயை உண்மையை சைவசித்தாந்தம் விளக்கும் பாங்கையையும் வெளிக்கொணர்கிறார். இறைவனுடன், இரண்டன்மை தோன்ற (வேறாய், ஒன்றாய், உடனாய்) நிற்கும். உயிருக்கான உறவையும் விளக்குகிறார். பிரபஞ்சம் ஒரு பொய்த் தோற்றம் என்ற *விவர்த்தவாதக் கொள்கை*யும் மறுக்கப்படுகிறது.

திருமந்திரப் பாடல்களுக்கு தவறான விளக்கம் தந்து சித்தாந்தக் கொள்கையைத் திரித்துக் காட்டும் ஹவாய் ஆதீனத்தினர், அவ்வாதீன முதல்வரின் குருவாக இருந்த சிவயோக சுவாமிகளையும் தமது முயற்சிகளுக்குத் துணையாகக் கொண்டுள்ளனர். சுவாமிகள் அனைத்திலும் சிவத்தைக் கண்டு மகிழும் அநுபூதி நிலையிலிருந்தவர். திருநாவுக்கரசு நாயனார், தான் காண்பவற்றிலெல்லாம் சிவனைக் கண்டு அவற்றைச் சிவனாகவே போற்றியதை தேவாரங்களில் காணலாம். சிவஞானம் கைவரப் பெற்றவர் எப்பொருளையும் சிவமாகக் காண்பதையும், மற்றையவர் பொருளை மட்டுமே காண்பதையும் பின்வரும் திருமந்திரத் தொடர் விளக்குகிறது.

*'மரத்தை மறைத்தது மாமத யானை*
*மரத்துள் மறைந்தது மாமத யானை'*

சிவஞான சித்தியார் நூல், *'சிவமே கண்டிருப்பர்'; 'பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்'* என்று சீவன் முத்தர் நிலையை விளக்குகிறது. சிவயோக சுவாமிகள் இந்த நிலையில் நின்று, சிவனாக எதனையும் கண்டு பாடியுள்ளார். இவற்றையும் விளக்கி, பண்டிதர் ஹவாய் ஆதீனத்தினர் கருத்தை மறுப்பது போற்றுதற் குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. மலேசியாப் பணி

பண்டிதர் அவர்களின் புலமையையும் ஆற்றலையும் அதிகம் பயன்படுத்திச் சைவப் பணி செய்தவர்கள் மலேசியா வாழ் சைவத் தமிழ் மக்கள். இவர்களின் முயற்சியால் பண்டிதரின் பல அரிய நூல்கள் வெளிவந்தன. சைவம் அதன் பாரம்பரியச் சிறப்புடன் பொலிந்து வளர்ந்தது.

ஆறுமுக நாவலர் அவர்கள் தனது பெரிய புராணப் பதிப்பில், *சூசனம்* (உள்ளுறை) என்ற பெயரில், ஒவ்வொரு நாயனார் சரிதையின் முடிவிலும், ஒவ்வொரு கட்டுரை எழுதி வெளியிட்டார். சைவ சித்தாந்தக் கருத்துக்களுடன் சைவ சமயம் குறித்த அரிய விளக்கங்கள் கொண்டது அவரின் சூசனங்கள். இருபத்து மூன்று நாயன்மாருக்கு மட்டுமே அவரின் சூசனங்கள் எழுதப்பட்டன. பரந்து பட்ட அவரின் பணிகளுக்கிடையில் அவற்றை எழுதி நிறைவு செய்ய நாவலருக்கு நேரம் கிடைக்காமல் இருந்திருக்கலாம். நாவலர் இதனை எழுதி நிறைவு செய்யாமல் விட்டது சைவ உலகிற்கு ஒரு குறையாக இருந்தது.

மலேசியாவில் அரும்பணி ஆற்றும் சைவ நிறுவனங்களில் கோலாலம்பூர் *சைவசித்தாந்த நிலையமும்* ஒன்று. நாவலர் எழுதி முடிக்காது விட்ட குறிப்பிட்ட சூசனத்தை எழுதி நிறைவு செய்யக் கூடிய தகுதியுடையவர் பண்டிதர் கந்தையா என்று இந்நிலையம் கருதியது. இதன் வேண்டுகோளுக்கிணங்கி, மற்றைய நாற்பது நாயன்மார்களுக்கும் சூசனம்[47] எழுதி முடித்தவர் பண்டிதர். பண்டிதரின் இப்பணியால் சைவ உலகத்தை உறுத்திய குறை நீங்கியது. நாவலர் எழுதிய சூசனத்தை நிறைவு செய்ய வேண்டுமென்ற பெரும் ஆவல் கொண்டிருந்தவர் மலேசியா, அமரர் **சைவ பூஷணம் இ.வே. கந்தையா**[48] அவர்கள். இவர் ஈழத்துப் பரம்பரையில் வந்தவர். இப்பெருமகன் சைவத்துக்குச் செய்த தொண்டுகள் அளப்பரியன. பெரிய புராண சூசனத்தை நிறைவு செய்து, பூர்த்தி செய்த பண்டிதர் அவர்கள், நாவலர் தொடங்கிய சூசனத்தையும் அவரின் ஆவலையும் பூர்த்தி செய்தார்.

பண்டிதர் பெரியபுராணத்துக்குச் சூசனம் எழுதப் பின்னணியாக இருந்தது அவர் எழுதிய *"சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை"* என்ற நூலாகும்.[49] மாயை பற்றிய இந்நூல் ஹவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதீனத்தின் சைவத்துக்குப் பொருந்தாத கொள்கைகளை மறுப்பதாகவும் இருந்தது. (இது குறித்து முன்னைய அத்தியாயம் ஒன்றில் பேசப்பட்டது.) கோலாலம்பூரில் 1986-ல் நடந்த *அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத்தரங்கில்* வெளியிடப்பட்டது இந்நூல். இந்நூலைப் படித்த மலேசிய அன்பர்கள், நாவலர் எழுதாமல் விட்ட சூசனத்தை எழுதி முடிக்கக் கூடிய தகுதி பண்டிதருக்கே உண்டு என்று எண்ணினார்கள். அவர்களின் எண்ணம் வீண்போகாது நிறைவேறியதை பண்டிதரின் சூசனங்களிலிருந்து அறியலாம்.

*சிவதரு மோத்தரம்* என்ற நூல் சைவர்கள் போற்றும் ஒரு உபாகம நூல். இதனை எழுதியவர் 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த *மறைஞான தேசிகர்.* சைவர்களுக்கான அறவியல் நெறிகளை எடுத்துக் கூறுவது இந்நூல். எளிதில் கிடைக்காத இந்நூலை மறு பதிப்புச் செய்ய விரும்பியவரும் அமரர் சைவ பூஷணம் இ.வே. கந்தையா அவர்கள்தான். இப்பெரியார் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களின் நூல்களை மறுபதிப்புச் செய்யும் முயற்சிக்குக் காரணமாயமைந்தவர். சென்னை *சைவசித்தாந்தப் பெருமன்றத்துக்கு* இந்திய ரூபா ஒரு லட்சம் கொடுத்து, அறக்கட்டளை அமைத்து, *சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்*[50] என்ற நூலைப் பதிப்பிக்க உதவியவர். இப்பெருமகனின் விருப்பம் நிறைவேறு முகமாக, கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலையம் சிவதருமோத்திர நூலை[51] மறுபதிப்புச் செய்தது. இப்பதிப்பை மேற்பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்தவர் பண்டிதர் அவர்கள்.

*சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் குருபூசை அறக்கட்டளை* ஒன்று கோலாலம்பூரில் அமைந்து, அப்பெரியாரின் நூல் ஒன்று ஒவ்வொரு ஆண்டும் மீள்பதிப்புச் செய்யப்பட்டு அவரின் குருபூசை தினத்தில் வெளியிடப்படுகிறது. இதற்கான செலவை ஏற்று இதனை முன்னின்று நடத்தி வந்தவர் அண்மையில் சிவபதம் அடைந்த **அ. ஆறுமுகம்** FCCA அவர்கள். ***ஆறுமுகம் ஐயா*** என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இப்பெருமகன் சிவ சிந்தனையுடன் ஒரு கர்மயோகி போல் வாழ்ந்தவர். பல சைவப் பணிகள் செய்தவர். அவருக்குப் பக்க பலமாக நின்று செயற்பட்டு வந்தவர், ***ஐ. குலவீரசிங்கம்*** என்பவர். திருநீற்றுப் பொலிவுடன் சிவனையே நிதமும் சிந்தை கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை மானசீகக் குருவாகக் கொண்டவர். இன்றும் இவர் பல வழிகளில் சைவப்பணி செய்து வருகிறார். பண்டிதருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் இவர்கள். சிவபாதசுந்தரத்தின் Glories of Saivism[52] என்ற ஆங்கில நூலை தமிழில் பண்டிதர் மொழிபெயர்க்கக் காரணமாக இருந்தவர்களும் இவர்களே. ***சைவமகத்துவம்***[53] என்பது பண்டிதரின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலின் பெயர். இது சைவர்களால் அவசியம் படித்தறிய வேண்டிய சிறந்த நூல்.

சைவக் கோயில் அமைப்பும் வழிபாட்டு முறைகளும் சைவ ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டன. கோலாலம்பூரில் உள்ள ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் சைவ ஆகம விதிகளுக்கு விரோதமாக இராஜ ராஜேஸ்வரி மூர்த்தம் வைக்கப்பட்டது. இதனை இக்கோயிலுடன் தொடர்புடைய அ. ஆறுமுகம் போன்ற சான்றோர்கள் எதிர்த்தனர். கோயிற் குருக்களும் வேறு சிலரும் இதனை நியாயப்படுத்த வெவ்வேறு விளக்கங்கள் கொடுத்தனர். ஆகம விதிமுறைக்கு அமையாத இந்தப் பிரதிஷ்டையை எதிர்த்து, தக்க நியாயங்களுடன், பண்டிதர் கண்டித்தார். அவரின் கண்டனம் 21.10.97 திகதியிட்ட வெளியீடாக (பிரசுரம்-6) அ ஆறுமுகம் அவர்களால் வெளியிடப்பட்டது.[54] இப்பிரசுரம் பண்டிதரின் ஆகம அறிவையும், சைவத்தைச் சிதைக்கும் குருக்கள்மார், அறிஞர்கள் ஆகியோரைக் கண்டிக்கும் துணிவையும், அவரின் ஆழ்ந்த சைவசமய ஈடுபாட்டையும் எடுத்துரைப்பதாக உள்ளது. புராணக்கதைகளை உதாரணமாகக் காட்டி சிலர் தமது கருத்தை நியாயப் படுத்துவதுண்டு. இது தவறென்பதை இப்பிரசுரத்திலுள்ள பண்டிதரின் பின்வரும் கருத்திலிருந்து அறியலாம்.

*'.... கிரியா காண்டத்தில் வேதம் கூறும் பசுக்கொலை வேள்வி, உபாசனா காண்டத்தில் அது கூறும் மிகையான சாதனைகள் ஒன்றையும் பிரமாணங்களாகச் சைவம் ஏற்பதில்லை. வேதத்துக்கே இக்கதியெனில் அதன் அங்கமாம் பேறுமின்றி உபவிளக்கமாய் மட்டுமிருக்கும் புராணஞ் சொல்லுஞ் சிவாகம சம்மதமற்ற ஒன்றுக்குப் பிரமாணத்தன்மை எங்கேயோ? சிவபுராணம் என்ற பெயருக்காகப் பதினெண் புராணஞ் சேர்ந்தவை சைவத்துக்குப் பிரமாண நூல்கள் ஆவதில்லை.'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் பொதுவாக உண்மைக் கதைகள் இல்லை என்பதும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு கொள்கை விளக்கம் அளிப்பது தவறென்பதும் அறிஞர்களின் முடிவு. இதனைப் பண்டிதரும் இங்கு விளக்குகிறார்.

சமய வாழ்வில் கிரியைகள் முக்கிய இடம் பெறுவன. சைவக்கிரியைகளுக்கு தத்துவ விளக்கங்கள் உண்டு. எத்தகைய விளக்கமும் இன்றிச் செய்யப்படும் கிரியைகள் பயன் தருவதில்லை. *'தன்னறிவில் விளக்கம் பெறாத எதுவும் செயல் முறையில் சீராய் நடப்பதுமில்லை; உரிய பலனை உகந்த முறையில் தருவதுமில்லை'* என்பது பண்டிதர் கருத்து. சைவக்கிரியைகள் பற்றிய விளக்கத்தைச் சைவர்கள் மத்தியில் பரவச் செய்யும் நோக்கில் பண்டிதரால் எழுதப்பட்ட நூல் *'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்.'* இந்த அரிய நூல் 1978-ல் முதற்பதிப்பாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. இது 2001-ல் மலேசியா சைவ அன்பர்களால், இந்நூலாசிரியர் க. கணேசலிங்கம் அவர்களின் துணையுடன், மீள்பதிப்புச் செய்யப்பட்டது.[55]

பண்டிதரின் மலேசியா நாட்டுச் சைவப் பணியாக அவரின் நூல்கள் வெளியீடும் மறுபதிப்பும் அமைந்தன. இவை சைவ அன்பர்களிடை சமய ஈடுபாட்டையும் சித்தாந்தச் சிந்தனையையும் வளர்ப்பதாக உள்ளன. சைவ உலகிற்குப் பெரிதும் பயன் தரும் பணடிதரின் இப்பணிகளை ஆதரித்து ஊக்குவித்த மலேசியாத் தமிழ்ச் சைவ அன்பர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், அவர்கள் பணி சிவப்பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. சைவத்தின் மறுமலர்ச்சி

எந்தச் சமயத்துக்கும் சில வரையறைகள் உண்டு. அவற்றின் வரம்பை மீறினால், அல்லது அவற்றை மாற்றினால், குறித்த சமயம் தனது தனித்துவத்தை இழந்து விடும்; அர்த்தமற்ற சடங்குகளின் தொகுப்பாக மாறிவிடும்; உடன்பாடற்ற வழிபாடுகளும் புகுந்துவிடும்; தன் நிலையிலிருந்து விழுந்து சிதைந்து விடும்.

சைவத்தைச் சிதைக்கும் ஊடுருவல்களை வெளிக்கொணர்ந்து அவற்றால் விளையும் தீமையைச் சைவ உலகிற்கு விளக்கியவர் பண்டிதர். சைவ சித்தாந்தத்துக்குப் பொருந்தாத அன்னிய அயல் வழக்குகளை அம்பலப் படுத்தி, சித்தாந்தத்தின் அறிவுசார் சிறப்பை உணரச் செய்தார். தத்துவ விளக்கம் அளித்துச் சைவக் கிரியைகளின் நோக்கையும் பயனையும் சைவ உலகு அறியச் செய்தார்.

இறை, உயிர் பற்றியும் அவற்றுக்குள்ளான தொடர்பு பற்றியும் சைவசித்தாந்தம் தெளிவாக உள்ளது. உயிர்கள் பல; இறைவனைப் போல உயிர்களும் நித்தியமாவை, என்பது சைவ தத்துவக் கருத்து. இறைவனின் கூறு நாங்கள், இறைவனிலிருந்து பிரிந்து வந்தோம், மீண்டும் இறைவனிடம் செல்வோம், இறையிலிருந்து எம்மைப் பிரித்தது மாயை, என்ற கொள்கைகள் சைவ சித்தாந்தத்துக்கு உடன்பாடற்றவை. இன்று சைவ விளக்கம் தருபவருக்குத் தமது சமயக்கொள்கையில் தெளிவு இல்லை. வேற்றுக் கொள்கைகளை சைவ தத்துவக் கொள்கைகளாக தருவதும் புகுத்துவதும் இன்று காணக்கூடியதாக இருக்கிறது. இவற்றைச் சைவர் அறிந்து, தமது சமயக் கொள்கையின் பெருமையை உணரச் செய்தவர் பண்டிதர்.

உபநிடதங்கள், பிரமசூத்திரம், போன்றவற்றிலுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களை திரித்தும் மறுத்தும் பொருள் காண்பது முன்னரே காணப்பட்டது. வேதாந்தம் சார்ந்த ஏகான் மவாத, மாயாவாதக் கருத்துக்கள் பல புகுத்தப்பட்டன. இவற்றை ஆராய்ந்து, இனங்கண்டு, களை எடுத்தவர் செந்திநாதையர். இவரின் ஆராய்ச்சி முடிவுகள் பண்டிதரின் வெளியீடுகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. செந்திநாதையர் போல் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ தத்துவத்தில் புகுந்த களையை நீக்கி, மறுமலர்ச்சி உண்டாக்கியவர் பண்டிதர்.

எந்தச்சமயத்திலும் கோயில் வழிபாடு முக்கியமானதொன்று. சைவசமயம், இறையருள் கூடிய இடம் திருக்கோயில் என்பதில் தெளிவாக உள்ளது. *'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'* என்ற முதுமொழி திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்துகிறது. *'ஆலயம் தானும் அரனெனத் தொழுமே'* என்று சைவசித்தாந்த முதன்மை நூலான *சிவஞானபோதம்* உரைக்கிறது.

விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், கோபம், பொறாமை போன்ற வழிகளில் நாம் உழன்று கொண்டிருக்கிறோம். இதனால் திரும்பத் திரும்ப கன்மத்தின் வழியில் பிறந்து இறந்து உழல்கிறோம். *'உழுத சால் வழியே உழுவான் பொருட்டு'* என்று அப்பர் சுவாமிகள் இதனை விளக்குவார். இந்தப் பொல்லாத பழக்கத்தை மாற்றக் கூடிய சக்தி தெய்வ சந்நிதியில் கிடைக்குமென்றும், அது வெளிப்படும் திருக்கோயில் நன்கு பரிபாலிக்கப்பட வேண்டும் என்றும் பண்டிதர் கூறுகிறார். தனது *'சிவாலய சேவை ஏன்? எப்படி?'* என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார்.[56]

*'நமது இப்பொல்லாப் பழக்கத்தை மனோதத்துவ ரீதியாக மெல்ல மெல்ல மாற்றக்கூடிய சக்தி தெய்வ சாந்நித்தியத்துக்கு மட்டுமே உண்டு. அதற்கு வேண்டுமளவு நிறைவான தெய்வ சாந்நித்தியமும், தெய்வ சைதன்யமும் ஆலயத்தில் வெளிப் படையாய்ப் பிரகாசமாய் என்றும் இருக்க வேண்டும். இருந்தால் முறையான எங்கள் வழிபாட்டிற்கு எப்படியாயினும் பலன் கிடைத்தல் தப்பாது... தெய்வ சைதன்யம் மங்காதிருக்க வைத்துக் கொள்ள வேண்டுவது ஆலய நிர்வாகத்தின் பொறுப்பு....'*

திருக்கோயில் தெய்வ சைதன்யத்துடன் சிறந்து விளங்குவதற்கு எத்தகைய சூழல் அமைய வேண்டும், கோயில் நிர்வாகமும் அர்ச்சகரும் எப்படிச் செயல் புரிய வேண்டும் என்றும் பண்டிதர் விளக்குகிறார். இன்று கோயில் அர்ச்சகர் சிலரின் செய்கைகள், வேலியே பயிரை மேய்வது போல், சைவக் கோயில்களின் தெய்வீகச் சூழலைக் கெடுப்பதாக உள்ளது. இதனைப் பண்டிதர் பலவாறு கண்டித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சகர் சிலரின் சைவ விரோதப்போக்கு நாவலரின் காலத்திலும் இருந்தது. சிதம்பரத்திலுள்ள அர்ச்சகர் சிலர், ஸ்மார்த்தக் கொள்கையைக் கைக்கொண்டு, சைவ நாயன்மார்களுக்கு பூசை செய்ய மறுத்தனர். இதனைக் கண்டித்து நாவலர் ஒரு போரட்டமே நடத்த வேண்டியிருந்தது. அவர்கள் குருவாகக் கொண்ட சங்கரரே திருஞானசம்பந்தர், கண்ணப்பர் போன்ற சைவ நாயன்மார்களைப் போற்றியதைச் சுட்டிக்காட்டி, குறிப்பிட்ட அர்ச்சகர்களின் செயல் அவர்களின் குருவையே நிந்திப்பதாக உள்ளது என விளக்கினார்.[57] பல எதிர்ப்புக்களின் இடையில் அர்ச்சகர்களின் இத்தகைய சைவ விரோதப் போக்கை முறியடித்தவர் நாவலர்.

நாவலரின் இத்தகைய பணிகளை பண்டிதர் அவர்களும் செய்ய வேண்டியிருந்தது. ஈழத்துச் சிவாச்சாரியார்கள் சைவத்தைப் பேணி வளர்த்து சைவ மக்களை நெறிப்படுத்தி வருபவர்கள். சைவ சித்தாந்த தத்துவத்தையும் ஆகமக் கிரியைகளையும் போற்றியவர்கள் இந்த அந்தணகுலத்தவர். குப்பிழானில் பிறந்த செந்திநாதையர், சங்கரர் வழிவந்த ஸ்மார்த்தர்களின் சைவ சித்தாந்தத்துக்கு எதிரான செயல்களை வெளிப்படுத்திச் சைவத்தைப் பேணியவர். அச்சுவேலிக் குமாரசாமிக்குருக்கள் சைவ ஆகமக் கிரியைகள் தொடர்பான நூல்கள் எழுதி அவரின் பிராமண குலத்தினருக்குப் பெருமை சேர்த்தவர்; சைவமக்களுக்கு வழி காட்டியவர். இவர்கள் போல வேறு பலரும் வேதியர் குலத்தில் இருந்தனர். இன்று, இவர்கள் காட்டிய வழியிலிருந்து விலகி, இவர்கள் வழிவந்த சிலர், சங்கரரைக் குருவாகக் கொள்வதையும் சைவத்துக்கு உடன்பாடற்ற வழிபாட்டு முறைகளையும் கொள்கைகளையும் பரப்புவதையும் காணமுடிகிறது. அர்ச்சகர்களுக்கு உயர் இடம் கொடுத்து மதித்து வந்த ஈழத்துச் சைவர் மத்தியில் இவர்களின் சைவம் சிதைக்கும் செயல்கள் பண்டிதரின் மனத்தை உறுத்தின. இவற்றைக் கண்டித்து அவர் எழுதிய கட்டுரைகள் பல. பின்வரும் அவரின் கூற்றுக்கள் உதாரணங்கள்.[58]

*"சைவ சித்தாந்தத்திற் சங்கரர் கொள்கை ஊடுருவலும் சைவாலயக் கிரியையமைதிக்குட் சாக்த ஊடுருவலும் நிரந்தர இன்னல்களாகப் (standing nuisance) பார்க்கின்றன. இவற்றை இனங்கண்டு களைந்து உண்மையை விளக்குதல், பயிர் வளர்ச்சிக்குக் களை பிடுங்கி நீர்ப் பாய்ச்சுதல் போலாம்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இங்கு சைவ அந்தணச் சிறுவர்களைத் திடீர் சிவாசாரியர்களாக்கும் பீடமொன்று, சிவாசார்ய பீடமன்றிக் காயத்திரி பீடமெனும் விலாசத்தில் இருப்பானேன்? சிவாச்சாரியார் ஒருவரால். சிவாசாரியரான இப்பீடத்தலைவர் ஸ்மார்த்த குருவான சங்கராசாரியாருக்கு இங்கு குருவழிபாடு நடாத்துவானேன்? காஞ்சி ஸ்மார்த்த மடத்து இளங்குருவுக்குங் கூடப் பிரபல்யமாகப் பாஞ்சவர்ஷிக ஜெயந்தி கொண்டாடுவதேன்? நாவலர் நல்லையிலுள்ள நியந்திரீ பீடம் சைவக் கோயிற் குருமார் மைந்தர்களைப் பகிரங்க விளம்பர மூலந்திரட்டி மரபுக்கு விரோதமாக ஸ்மார்த்த மடத்தில் குருமார் பயிற்சிக்கு அனுப்புவானேன்? காயத்திரி பீடம் அவர்க்கு ஆரம்ப பயிற்சி கொடுத்துதவுவானேன்?*

*எல்லாவற்றுக்கும் மேலாக பிரசித்தமான நம்நாட்டுச் சிவாச்சார்யத்துவம் பெற்றுச் சைவாலயக் குருக்கள்மாராயிருப்போர் சிவாசார்ய நாம வழக்குக்கு முழுக்குப் போட்டுவிட்டுத் தம் ஒன்றியத்துக்கு, இந்துக்குருமார் ஒன்றியம் என விநோத நாமஞ் சூட்டிப் பிரகடனம் பண்ணுவானேன்?"*

மேற்காட்டப்பட்ட பண்டிதரின் சிந்தனையும் அவர் எழுப்பிய கேள்விகளும் இன்று சைவசமயத்தைச் சிதைக்கும் ஊடுருவல்களையும், சைவத்தைக் காப்பதற்கு, அவற்றைக் களைய வேண்டிய அவசியத்தையும் எடுத்து விளக்குகின்றன. சைவமறுமலர்ச்சியும் சீர்திருத்தமும் இன்று மிகவும் வேண்டப்படுவன. இவற்றை உண்டாக்கும் பண்டிதரின் பணிகள் ஆறுமுகநாவலர் வழி வந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக அமைந்தவை.

சைவ சமயம் அதன் பாரம்பரியப் பெருமையுடன் பேணி வளர்க்கப்படுவது ஈழத்தில். இதில் யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரின் பங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இன்று அவர் பிறந்த யாழ்ப்பாணத்தில் அனுமார் கோயில் ஒன்று கட்டப்பட்டு சைவமக்கள் திசை திருப்பப்படுகின்றனர். ஸ்மார்த்தராகத் தம்மைக் காட்ட முயலும் சைவப்பற்றற்ற குருமாரினால், செல்வாக்கு மிக்க சிலரின் உதவியுடன், கட்டப்பட்டது இக்கோயில். இதனை வன்மையாகக் கண்டித்தவர் பண்டிதர். சைவத்தில் எத்தகைய இடமும் பெறாத இந்த இராமாயண பாத்திரம் பற்றிய அவரின் பின்வரும் கூற்று சிந்தனைக் குரியது.[59]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இந்நாளில் பேசப்பட்டு வரும் ஆஞ்சனேயர் கோயிற் சார்பிலாம் பொல்லாங்கை உணர வேண்டிய விதம் இவ்விதம். சைவத்திலாவது சைவக்கிரியைகளின் பலன் பாடான ஆன்மீகப் பேற்றிலாவது பற்றோ விசுவாசமோ அற்ற ஐயர்மார் சிலர் வேடிக்கை விநோதங்களாற் பொதுமக்களை மயக்கும் மாசாலம் இது.*

*அரிய புராண இதிகாச பாத்திரங்களோ பிழைப்புக்காக ஒரு சிலர் வாயாலம் பண்ணும் மந்திராலோசனைத் தேவதைகளோ சைவத்தில் ஆசார முறைப்படியான வழிபாட்டுத் தெய்வங்களல்ல. அவற்றுக்குக் கோயில் எடுத்தல், பிரதிட்டை குடமுழுக்கு செய்தல், அன்றாட விசேட வழிபாடு சைவத்தில் அறியாமையாற் கூட நேற்றுவரை இல்லாதவை. அதாவது, ஸ்மார்த்தம் என்ற ஒன்று நயவஞ்சகமாகச் சைவத்திற் புகுந்து நடமாட அனுமதிக்கப் பெறுமளவும் இருந்ததில்லை."*

பண்டிதரின் மேற் கூறப்பட்ட வார்த்தைகள் சைவர்கள் அவசியம் அறிய வேண்டியவற்றையும் அறிந்து செயலாற்ற வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகின்றன.

*"சைவ மண்ணில் சைவம் சிதைக்கப்படுகிறது! உள்ளிருந்தே கொல்லும் பகை"* என்ற பண்டிதரின் கட்டுரை மேற்குறிப்பிட்ட வற்றை விரிவாக ஆராய்ந்து விளக்குகின்றது. *'உயர்வுமிகு சைவசமயம், உடன்பாடற்ற வழிபாடு'* என்ற நூலில் பிரசுரிக்கப்பட்ட இக்கட்டுரையும் *"ஆஞ்சநேயர் சைவர் வழிபாட்டுத் தெய்வமல்ல"* என்ற கட்டுரையும் சைவக் கொள்கையை விளக்கி, அதில் ஆஞ்சனேயர் போன்ற உருவகங்களின் இடமில்லா நிலையையும் விளக்குவதாக உள்ளன. சைவர்கள் அவசியம் படித்தறிய வேண்டிய இக்கட்டுரைகள் சைவத்தில் இன்றுள்ள களையை நீக்கி சைவமறுமலர்ச்சி உண்டாக்கத் துணைபுரிவன.

சைவத்துக்குச் சிவனே முழுமுதற் கடவுள். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்கள் செய்யும் நிலையிலுள்ள தெய்வங்கள் *பிரமா, விஷ்ணு, உருத்திரன்* ஆகியோர். மும்மூர்த்திகள் என்று பிரமா, விஷ்ணு, சிவனைக் கொள்வது சைவத்தில் இல்லாதது. இது அண்மைக் காலங்களில் சைவர்களிடை புகுத்தப்பட்ட, சைவத்துக்கு ஒவ்வாத கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்றதே *ஷண்மதம்* என்ற பெயரில் அறுவகைச் சமயம் என்று *சைவம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம்* ஆகியவற்றைக் காட்டுவதும். இச்சமயங்களைத் தோற்றுவித்தவர் சங்கரர் என்ற கருத்தில் அவரைச் *ஷண்மத ஸ்தாபகர்* என்றும் சிலர் எழுதுகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானது. மெய்ப்பொருள் காண்பதற்கு ஞானம் ஒன்றே போதும் என்ற கொள்கைகொண்ட சங்கரரின் சீடர்கள், பக்திக்கும் கிரியைக்கும் முக்கிய இடம் கொடாமல், கடவுள் வழிபாட்டில் ஈடுபாடின்றி வழிதவறிச் செல்லும் நிலை தோன்றியது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக குறிப்பிட்ட ஆறு சமயங்களில் ஒன்றினையாவது பின்பற்றுமாறு சங்கரர் அன்று தனது சீடரை வலியுறுத்தினார். இது நூல்களில் காணக் கூடியது. இந்த ஆறுசமயங்களில் சைவம் வைணவம் தவிர்ந்த மற்றையவை தமிழகத்தில் இல்லாதவை. சாக்தம் இந்தியாவின் வடக்கிலுள்ள வங்காள நாட்டில் உள்ள மதம். மற்றைய மூன்றும் இன்று இந்தியாவில் கூடச் சமயங்களாக இல்லை. சைவமக்கள் *அறுவகைச் சமயம்* என இவை பற்றிப் பேசுவது அறியாமையே. இது குறித்த, இந்நூலாசிரியரின் பின்வரும் கருத்து சிந்திக்கற்பாலது.[60]

*''காணபத்தியம் போன்றவற்றைக் கொண்ட அறுவகைச் சமயம் சைவ நூல்களிலும் தமிழ் நூல்களிலும் இடம் பெறவில்லை. அவை கூறும் அறுவகைச் சமயங்கள் இவற்றுக்கு வேறானவை. இதனை அறியாமல், எவரோ சொல்வதைக்கேட்டு, சைவர்கள் அறு சமயம் என இவை பற்றிப் பேசி மகிழ்வது வருத்தமளிப்பது."*

*ஷண்மதம்* என்பது சைவம், வைணவம் ஆகிய தமிழகத்துச் சமயங்களைச் சிதைக்கும் நோக்கில் ஸ்மார்த்தங்களால் புகுத்தப்பட்டது என்பது பண்டிதரின் கருத்து. இதுபற்றி அவர் பின்வருமாறு எழுதுகிறார்.[61]

*''இனி ஷண்மதத்திலும் சைவம் உண்டு என்பது வெறும் மாசாலம். உண்மைச் சைவத்தைச் சித்திரவதைக்குள்ளாக்கிச் சிறைக் கைதி ஆக்கின நிலையே ஷண்மதச் சைவம். களை எடுத்து எஞ்சிய வெறுந்தோல் அது. அச்சைவத்தில் சிவசாதனப் போற்றுதல் இல்லை; விபூதியே பூச்சளவுக்கு; பஞ்சாட்சர உண்மை விளக்கத்தில் ஒப்புதல் இல்லை; சிவாகம அனுசரணை இல்லை. அச்சைவம் ஸ்மிருதி வழிச் சைவம்; அதற்குப் பெயர் சுமார்த்தம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுமார்தச் சைவத்துக்குக் காலைத் தெய்வம் விஷ்ணு; மாலைத் தெய்வம் சிவன்; இராத்திரித் தெய்வம் அம்மன். உண்மைச் சைவத்துக்கு 24 மணி நேரம் சிந்தனையுஞ் சிவனுக்கே...."*

சைவசமயத்தைச் சிதைப்பதாக மேற்கூறப்பட்ட பல இன்று சைவசமுதாயத்தில் ஊடுருவியுள்ளன. *இந்து சமயம்* என்ற பெயரிலே இவை பெரும்பாலும் நிகழ்கின்றன. *இந்து* என்ற சொல்லாட்சி இடையில் வந்தது; அது முன்பு இல்லை. *இந்து சமயம்* என்று ஒரு தனிச்சமயம் இல்லை. இந்திய சமயங்கள் பலவற்றின் கூட்டாக இது இருக்கிறது. இதனைச் சுவாமி விவேகானந்தரே பல இடங்களில் விளக்கியுள்ளார்.

இந்தியச் சமயங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான தத்துவமும் வழிபாட்டுமுறையும் உண்டு. இந்நிலையில் *இந்து சமயம்* என்று ஒரு தனிச் சமயத்தைக் கூறமுடியாது. *இந்து* சமயம் என்ற பெயரில் ஒரு சிலரின் குறிப்பிட்ட கொள்கைகள், முறைகள் சைவர் மத்தியில் பரப்பப்படுவதை உண்மைச் சைவர்கள் அனுமதிப்பதில்லை. பண்டிதரின் பின்வரும் கருத்துக்கள் இதனைப் பிரதிபலிப்பதாக உள்ளன.[62]

*"விவேகானந்தரும் இராமநாதனும் சமய ஞானத்தில் உயர்தரம். இவர்கள் கருத்துக்களே நாங்கள் இந்துக்கள் அல்ல என்பதற்கு போதுமான பிரமாணம்.*

*அன்றியும் 'இந்து' என்ற இச்சொல் இப்போ சில தசாப்தங்கள், அதாவது இந்தத் தலைமுறைக்கு முன், எங்கள் சமூகத்தில் புழங்கியதில்லை. சைவ ஆதார நூல்களாகிய சிவாகமம், சைவத் திருமுறைகள் பன்னிரண்டு, சித்தாந்த சாத்திரம் பதினான்கு, தமிழ்ச் சைவ புராணங்கள் எதிலும் அது இல்லை."*

இங்ஙனம் சைவசமயத் தத்துவக்கொள்கை, வழிபடு தெய்வம், வழிபாட்டு முறை ஆகியவற்றில் புகுந்த உடன் பாடற்றவற்றை விளக்கி, அவற்றை அகற்ற வேண்டிய அவசியத்தை வலியறுத்தியவர் பண்டிதர் அவர்கள். ஆறுமுக நாவலர் வழியில் வந்த இப்பெருமகனின் சைவ மறுமலர்ச்சிப் பணி சைவம் சிதையாமல் பேணப்படுவதற்கு பெரிதும் துணைபுரிவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு

1. பண்டிதர் மு. கந்தையா, *சைவத்தமிழ் அறிவியற் பண்பாட்டியக்கம், பிரசுரம்–3.*

2. (i) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், *சைவ வினாவிடை 1ம் புத்தகம்*

   (ii) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், *சைவவினாவிடை 2ம் புத்தகம்*

3. *திருத்தொண்டர் புராணம்*, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் பரிசோதிக்கப்பட்டு, அவரின் சூசனங்களுடன், சதாசிவம் பிள்ளையினால் பதிப்பிக்கப்பட்டது, சென்னை, 1884.

4. பண்டிதர் மு. கந்தையா, *சைவசித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள்*, யாழ். பல்கலைக்கழக வெளியீடு, 1994.

5. *திருத்தொண்டர் புராணம் மூலமும் சூசனமும்*, சைவசித்தாந்த நிலையம், குவலாலம்பூர், மலேசியா 1993

6. *காசிவாசி செந்திநாதையர்*, செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, குப்பிழான், 1978

7. மேற்படி

8. செந்திநாதையர், *நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழி பெயர்ப்பு*

9. இலக்கம் 6ல் கண்டவாறு

10. க.கணேசலிங்கம், *ஈழத்தில் சைவ சித்தாந்த ஆய்வு* கட்டுரை, 'தாய்நாட்டிலும் மேலைநாடுகளிலும் தமிழியல் ஆய்வு' நூலில் உள்ளது, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000

11. S.Shivapathasundaram B.A., *An Outline of Shivagnanabodham with a Rejoinder to a Christian Critic*, Saiva Prakasa Press, Vikriti Year. (It is reprinted in 2001 by the `Saiva Siddhantin Shivapathasundaram Guru Pooja Trust', Kuala Lumpur, Malaysia).

12. இல.4ற் கண்டவாறு

13. மு. திருவிளங்கம், *சிவஞான சித்தியார் புத்துரை*, யாழ். கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 1971 (மறுபதிப்பு).

14. மு. திருவிளங்கம், *சிவப்பிரகாசம் புத்துரை*, யாழ். கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1974 (மறுபதிப்பு).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. வாகீச முனிவர், *ஞானாமிர்தம்*, மூலமும் உரையும், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1987.

16. Rev.G.U.Pope, *The Thiruvasagam*, Oxford, 1900 (Reprint by University of Madras, 1979).

17. இலக்கம் 4ற் கண்டவாறு

18. சிவஞானசித்தியார் முதலாஞ் சூத்திரத்து 64–ஆம் செய்யுள் உரை

19. *சிவஞானபோத மாபாடியம்*, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.

20. இலக்கம் 4ற் கண்டவாறு

21. மேற்படி

22. மேற்படி

23. Dr.V.A. Devasenapathi, *Saiva Siddhanta as expounded in the Sivajnana Siddiyar and its Six Commentaries*, Madras University, 1960. (General Editor: Dr.T.M.P. Mahadevan)

24. *சித்தாந்த சாத்திரம் பதினான்கு*, சைவதித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 1994

25. பண்டிதர் மு.கந்தையா, *சித்தாந்தச் செழும்புதையல்கள்*, ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியா பீட வெளியீடு, 1978 (சித்தாந்தம் இதழில் வெளிவந்த கருத்துக்கள்)

26. திருக்குறள் பரிமேலழகர் உரை.

27. இலக்கம் 5ல் கண்டவாறு

28. க.கணேசலிங்கம், *வள்ளுவம் வழங்கும் தமிழர் தத்துவம்*, சென்னை 2001

29. இலக்கம் 25 ல் கண்டவாறு.

30. சிவஞானசித்தியார், அறுவர் உரை

31. மேற்படி

32. க. கணேசலிங்கத்திற்குப் பண்டிதர் எழுதிய 12.1.98 திகதிக் கடிதம்.

33. மு. கந்தையா, *சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி*, யாழ். பல்கலைக்கழக வெளியீடு, 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. இலக்கம் 24ல் கண்டவாறு

35. மேற்படி

36. அருணைவடிவேலு முதலியார், *சிவஞானபோதத் திருநெறியுரை*, சத்வித்ய சன்மார்க்க சங்கம், பேரூராதீனம், கோவை, 1992

37. இலக்கம் 13ல் கண்டவாறு

38. இலக்கம் 14ல் கண்டவாறு

39. சு. கணேசலிங்கத்திற்கு பண்டிதர் எழுதிய 13.10.97 திகதிக் கடிதம்.

40. *Thirumanthiram translation* by B. Natarajan, Tamil Nadu

41. Thirumanthiram verse 5

42. V.K. Palasuntharam B.A.(Ceylon), *Souls are Beginingless*, Selangor/Wilayah Persekutuan Ceylon Saivites Association, Kuala Lumpur, Malaysia, 1983

43. மு. கந்தையா, *சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை,* இரண்டாம் அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத்தரங்கு, கோலாலம்பூர், 1986.

44. திருமந்திரம் 2397

45. இலக்கம் 33ல் கண்டவாறு

46. மேற்படி

47. இலக்கம் 5ல் கண்டவாறு

48. K. Ganeselingam, *Saivabushanam R.V. Kanthiah* article, 'Saiva Ulakam' vol .31, World Saiva Council Publication.

49. இலக்கம் 43ல் கண்டவாறு

50. பொ. முத்தையாபிள்ளை, *சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்*, சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 1989

51. *மறைஞானசம்பந்தர், சிவதருமோத்தரம்*, சைவசித்தாந்த நிலையம், குவாலாலும்பூர், மலேசியா, 1998

52. S. Shivapathasundaram, *Glories of Shaisvaism,* The Saiva Prakasa Press, Jaffna, 1954.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. பண்டிதர் மு. கந்தையா, *சைவமகத்துவம்*, (மேற்காட்டிய நூலின் மொழி பெயர்ப்பு), சைவ சித்தாந்தி சிவபாதசுந்தரனார் குருபூசை அறங்காப்பு, குவாலாலும்பூர், 1997

54. *Booklet No.6* of 21.10.97 published by A. Arumugam of Petaling Jaya, Malaysia, (objections by Pandithar M. Kanthiah to views of some scholars).

55. பண்டிதர் மு. கந்தையா, *சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்*, முருகேசு கந்தப்பிள்ளை ஞாபகார்த்த வெளியீடு, காஜாங், மலேசியா, 2001 (முதற்பதிப்பு: யாழ்ப்பாணம், 1978)

56. பண்டிதர் மு.கந்தையா, *சிவாலய சேவை ஏன்? எப்படி?*, சைவ சமய அபிவிருத்திச் சங்கம், ஏழாலை மேற்கு, சுன்னாகம், 1986

57. ஆறுமுக நாவலர், *பெரியபுராணம் (உரைநடை)*, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை, சிதம்பரம், 1986.

58. *உயர்வுமிகு சைவம் உடன்பாடற்ற வழிபாடு* (கட்டுரைத் தொகுப்பு), உலக சைவப் பேரவை, இலண்டன், 2001

59. மேற்படி

60. க. கணேசலிங்கம், *'அறுவகைச் சமயம்'* (கட்டுரை), 'சைவநீதி' இதழ், கொழும்பு, சித்திரபானு–ஆடி (2002)

61. பண்டிதர் மு. கந்தையா, *சைவர்களே! சிந்தியுங்கள்!* (கட்டுரை), 'சைவ உலகம்' தொகுதி 28, உலக சைவப்பேரவை, மார்ச் 2000.

62. பண்டிதர் மு. கந்தையா, *சைவர்கள் இந்துக்கள் அல்ல* (கட்டுரை), 'சைவ உலகம்', தொகுதி 35, உலக சைவப்பேரவை.

63. K. Ganesalingam, *Freewill* (article), `Saiva Ulakam', vol:25, World Saiva Council Publication.

64. பண்டிதர் கந்தையா, *தற்றுணிபு*, 'சைவ உலகம்', vol:30, உலக சைவப் பேரவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் (பண்டிதர் மு. கந்தையா) மும்மொழிப்புலவர்; சைவசித்தாந்த வித்தகர்; திருமுறைகளில் முழுகித்திளைத்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் பின்பற்றி பல அரிய சைவ நூல்களையும், கட்டுரைகளையும் கண்டனங்களையும் துணிந்து வெளியிட்டவர்.

இத்தகைய சைவப் பெரியாா நினைவாஞ்சலியாக வெளிவருவம் **'தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு. கந்தையா'**, என்ற நூலை எழுதியுதவிய ஆதீனப் புலவர், சைவசித்தாந்தக் கலாநிதி, சித்தாந்தரத்தினம் திரு.க. கணேசலிங்கம் அவர்கள் பணியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். சைவ உலகம் இந்நூலைப் பெற்றுப் பயனடையுமாக.

தவத்திரு சிவநந்தி அடிகளார்
இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org